மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 115* செப்டம்பர் *2025*

## இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாரிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவி

***PT# 365, May 1949, pp. 74-78***



*1.* **நா**ம் இதுவரை பரிசுத்த ஆவியை குறித்துப் பின்வரும் கண்ணோட்டங்களிலிருந்து ஆராய்ந்திருக் கிறோம்:*(1)* அது ஒரு நபரல்ல, *(2)* அது தேவனுடைய வல்லமை, *(3)* அது தேவனிலுள்ள அவருடைய மன இயல்பு, *(4)* அது கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய மன இயல்பு, *(5)* அது பரிசுத்தவான்களிலுள்ள தேவனுடைய மன இயல்பு, *(6)* அது திரள் கூட்டத்தாரிலுள்ள தேவ னுடைய மன இயல்பு, *(7)* அது பாத்திவான்களிலுள்ள தேவனுடைய மன இயல்பு.இப்பொழுது நாம் "இழந் ததைத் திரும்பப் பெறும் வகுப்பாரிலுள்ள" தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியைக் குறித்து ஆராய் வோம்.

*2.* பரிசுத்த ஆவியின் உண்மையான அம்சங் களைக் கருத்தில் கொள்ளும்போது, அது ஒரு நபரல்ல என்ற கருத்தானது அதின் ஒரு அம்சமாக அல்லாமல், அதைப் பற்றிய தவறான கருத்தை நிராகரிக்கும் ஒன்றாக இருக்கிறது. ஆகையால் "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாரிலுள்ள பரிசுத்த ஆவி என்ற கருத்தைக் கூட்டும் போது, அதில் உண்மையாக ஏழு அம்சங்கள் இருக் கின்றன - ஏழு என்பது முழுமையான தெய்வீக எண்.

*3.* நாம் இதுவரை பரிசுத்த ஆவியைக் குறித்து ஆராய்ந்த காரியங்கள், நம் அனைவரின் மனம் இருதயம் மற்றும் சித்தத்திற்கு ஆசீர்வாதமாக இருந்தன என்று நாங்கள் நம்புகிறோம். பரிசுத்த ஆவியைப் பற்றிய நம் முடைய மீதியான ஆராய்வுகளும், அவ்வாறே ஆசீர்வாத மாக இருக்குமென்று நம்புகிறோம். தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட வகுப்பார்களாக, நாம் இதுவரை ஆராய்ந்த எல்லா வகுப் பார்களும், விசுவாச வகுப்பாராக இருக்கிறார்கள் ஆகை யால் தேவன், விசுவாச வகுப்பாரிடம் விசுவாசத்தைக் கோரும் சூழ்நிலைகள் மேலோங்கி இருக்கும்போது, அவர்களுடன் செயல்படக் கூடியதாக இருந்தது. ஆனால் பரிசுத்த ஆவி சம்பந்தமாக நாம் இப்பொழுது ஆராயப் போகிற வகுப்பாராகிய "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பார் விசுவாச வகுப்பாரல்ல. அவர்கள் அவிசுவாச வகுப்பாராக இருக்கிறார்கள். ஆகையால் எந்த சூழ்நிலை களின் மத்தியில் அவர்களுக்குப் பரிசுத்த ஆவி அளிக் கப்படுமோ, அந்த சூழ்நிலைகள் விசுவாசத்தைக் கோரும் சூழ்நிலைகளாக இருப்பதில்லை. தரிசித்த உண்மையை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிவதைக் கோரும் மில்லினிய யுக சூழ்நிலைகளாக இருக்கும்.

*4.* "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பார் விசுவாச வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லவென்பது பின் வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: தேவனுடைய செயல்பாடுகளைக் கண்டு கொள்ள முடியாத போதிலும் அவரிடத்தில் தைரிய உறுதி வைக்கிற விசுவாசம் அவர் களிடம் இல்லை. ஆனால் மில்லினிய யுகத்தில் அவர்கள் எவ்வித விசுவாசமும் இல்லாதவர்களாக இருப்பார் களென்பதை இது அர்த்தப்படுத்தாது. ஏனென்றால் அக்காலத்திற்குரிய தேவ வார்த்தையையும் பரிபாலனங் களையும் அவர்கள் விசுவாசிப்பார்கள். ஆனால் அக்

## தூது நிரல்

*1.* இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாரிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவி.........*1*

*2.* நீதியின் விருட்சங்கள்..................................................*11*

*3.* கர்ஜிக்கிற சிங்கம்......................................................*16*

காலத்தில் காரியங்கள் எவ்வளவு தெளிவாக இருக்குமென்றால், அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையாயிருந்தாலும் தப்பறைக்குள் போவதில்லை (ஏசா. 35:8). ஆகையால், தேவனைக் கண்டு கொள்ள முடியாத போதிலும் அவரிடத்தில் தைரிய உறுதி வைக்கிறவர்களாக, அக்காலத்தில் அவர்கள் இருக்க தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய வழிகள் எல்லாவற்றையும் கண்டு கொள்ள கூடியவர்களாக இருப்பார்கள். அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார்கள், பல நேரங்களில் தரிசிக்காமலே விசுவாசத்தை அப்பியாசிக்க வேண்டியதைப் போல் அல்லாமல், இந்த வகுப்பாருக்கு அக்காலத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை ஏற்றுக் கொண்டு, விசேஷமாக அதற்குக் கீழ்ப்படிவது அவர்களிடம் கோரப்படும்.

## பரிசுத்த ஆவி கொடுக்கப்படுவதற்கு முன்பு "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாரிலிருக்கும் மன இயல்பு

*5.* இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவி அளிக்கப்படுவதை நாம் இன்னும் சிறப்பாக மதித்துணருவதற்கு, மில்லினிய யுகத்தில் அவர்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்படத் தொடங்குவதற்கு முன்பு அவர்களுக்கிருக்கும் மனஇயல்பைக் கருத்தில் கொள்வது ஏற்றதாகும். அவர்கள் மரித்தபோது அவர்களுடைய மனஇயல்பு என்னவாக இருந்ததோ, சரியாக அதே மனஇயல்புடையவர்களாக இருப்பார்கள். ஏனென்றால் மரணநிலையில் மனஇயல்பு எவ்விதத்திலும் மாறுவதில்லை. மிக சிலர் மட்டுமே, மரிக்காமலே மகா உபத்திரவ காலத்தின் முடிவுவரை உயிரோடிருந்து, தொடர்ந்து மில்லினிய யுக சூழ்நிலைகளுக்குள் செல்வார்கள். அவர்கள் எல்லோரும் மரபு வழியாகக் சீர்கேடடைந்தவர்களாக இருப்பார்கள். மேலும் உலகத்தின் தீமையான சூழ்நிலைகளின் கீழ், கொஞ்சம் காலத்திற்கு வாழ்ந்தவர்கள், மரபு வழியான சீர்கேட்டுக்குக் கூடுதலாகத், தீமையான எண்ணங்கள், நோக்கங்கள், வார்த்தைகள், செயல்கள், தீமையான சுற்று சூழல்கள், அவர்கள்மேல் செயல்படுகிற மற்றும் அவர்கள் இடங் கொடுக்கிற தீமையான தாக்கங்கள் ஆகியவற்றினாலும் மேலும் சீர்கேடடைகிறார்கள். இவ்வாறாக அவிசுவாச வகுப்பாரின் பல்வேறு அங்கத்தினர்களில் இந்த சீர்கேடு வெவ்வேறான அளவுகளிலும், மனஇயல்பின் வெவ்வேறான அம்சங்களிலும் இருக்கும்.

*6.* ஆகையால் எல்லாருடைய திறமைகளிலும் மன இயல்புகளிலும் இந்த சீர்கேடு இருந்தாலும், அது எல்லோரிலும் ஒரே அளவில் இருப்பதில்லை. சிலரில் அது மிதமாக இருக்கும், சிலரில் அது மிக மோசமாக இருக்கும், மற்றவர்களில் இது இந்த இரு எல்லைகளுக்கிடையிலிருக்கும். இவ்வாறாக ஒரே அளவிற்கு இல்லையென்றாலும் எல்லாரும் மனதிலும் இருதயத்திலும் சித்தத்திலும் சீர்கேடுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் உயர்நிலை முதன்மை, தாழ்நிலை முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்கள் ஆகியவைகள் ஒன்றிலும் பூரணர்களாக இருப்பதில்லை. சிலரில் சில குணநலன்கள் ஓரளவிற்கு இருந்தாலும் அவைகள் மிகவும் அபூரணமாக இருக்கும். சிலரில் அவைகள் முற்றிலும் இல்லாமலிருக்கும். எல்லாரும் எல்லா குணநலன்களிலும் சீர்கேடுள்ளவர்களாக இருப்பார்கள்.

*7.* இவ்வாறாக அவர்கள் மிக அதிகமான சரீர, மன, கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியான தவறுகளை உடையவர்களாக இருப்பார்கள். உயர்நிலை முதன்மை தவறுகள் அவர்கள் அனைவரில் அதிகமாகவோ குறைவாகவோ காணப்படும். அவைகளாவன: சந்தேகம், விசுவாசக்குறைவு, அவிசுவாசம், மனதளர்ச்சி, நம்பிக்கையின்மை, மனமுறிவு, திட சித்தமின்மை, எளிதில் வசப்படுகிற தன்மை, அடிக்கடி மாறும் தன்மை, மன உறுதியின்மை, தேவபக்தியின்மை, சகோதர பற்றின்மை, அன்பின்மை.

*8.* அவர்களில் எஞ்சியுள்ள தாழ்நிலை முதன்மை குணநலன்கள் என்னவாக இருந்தாலும் எல்லாரும் அவைகள் எல்லாவற்றிலும் சீர்கேடடைந்தவர்களாக இருப்பார்கள். அதாவது சுயமதிப்பு, அங்கீகாரவிருப்பம், சமாதானம், எச்சரிக்கையோடிருத்தல், ரகசியம் காத்தல், போரிடும் குணம், வலிய தாக்கும் குணம், பரிபாலன விருப்பம், உணவு, ஆரோக்கியம், ஜீவன் ஆகியவற்றிற்கான விருப்பம் போன்றவைகளில் சீர்கேடுள்ளவர்களாக இருப்பார்கள். இந்த பண்புகள் சம்பந்தப்பட்ட சில அம்சங்கள் மட்டு மீறி செயல்படும் அல்லது குறைவாக செயல்படும். அதின் விளைவாக அவர்களில் அகந்தை அல்லது மிதமிஞ்சிய மனத்தாழ்மை, பகட்டு அல்லது மிதமிஞ்சிய தன்னடக்கம், சோம்பல் அல்லது மிதமிஞ்சிய சுறுசுறுப்பான உழைப்பு, கோழைத்தனம் அல்லது அசட்டு துணிச்சல், மாயம் பண்ணுதல் அல்லது மிதமிஞ்சிய விதத்தில் எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துவது, பிறர் பொருள் மீது ஆசை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான பரிபாலன விருப்பம், சண்டை செய்யும் குணம், மிதமிஞ்சிய அல்லது குறைந்த போரிடும் குணம், கடுங்கோபம் அல்லது வெறுப்பு, மிதமிஞ்சிய அல்லது குறைவான வலிய தாக்கும் குணம், பெருந்திண்டி மற்றும் குடிபழக்கம் அல்லது கடும்நோன்பு, மிதமிஞ்சிய அல்லது குறைவான தற்பாதுகாப்பு ஆகியவைகள் அவர்களிலிருக்கும்.

*9.* சிலரில் கற்பின்மை அல்லது எதிர் பாலினரிடம் பற்றின்மை அல்லது மரியாதையின்மை, கணவனுக்குரிய பற்றின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான கணவனுக்குரிய பற்று, மனைவிக்குரிய பற்றின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான மனைவிக்குரிய பற்று, பிள்ளைகளுக்குரிய அன்பின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான பிள்ளைக்குரிய பற்று, சகோதர பற்றின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான சகோதரர் பற்று, நட்பின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான நட்பு, வீட்டின்மேல் பற்றின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான பற்று, தேசபற்றின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான பற்று ஆகியவைகள் அவர்களிலிருக்கும்.

*10.* மூன்றாம் நிலை குணநலன்களுக்கெதிராகச் செயல்படும் குணகேடுகள் அவர்கள் எல்லோரிலும் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். இவ்வாறாகச் சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின்மேல் அக்கறையின்மை, அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான வைராக்கியம், துயரம் அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான சந்தோஷம், பயபக்தியின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான பயபக்தி, முரட்டுத்தனமாக அதிகாரத்தை மீறும் தன்மை அல்லது குறைவான அல்லது மித மிஞ்சிய பணிவு நயம், அதிருப்தி அல்லது மித

மிஞ்சிய அல்லது குறைவான திருப்தி, இரக்கமின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான இரக்கம், கீழ்ப்படியாமை அல்லது மிதமிஞ்சிய கீழ்ப்படிதல் (அடிமைத்தனம்) அல்லது குறைவான கீழ்ப்படிதல், முரட்டுத்தனம் அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான மென்நயம், தீயகுணம் அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான நற்குணம், தீவிரவாதம் அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான நடுநிலைபண்பு, பாரபட்சம் அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான பாரபட்சமின்மை; விசுவாசஉண்மைத்துவமின்மை அல்லது மிதமிஞ்சிய அல்லது குறைவான விசுவாசஉண்மைத்துவம் ஆகிய வைகள் அவர்களிலிருக்கும்.

*11.* இவ்வாறாக அவர்களுடைய மனம் இருதயம் மற்றும் சித்தம் அதிகமாகவோ குறைவாகவோ நீதியான மற்றும் நல்ல காரியங்களைப் பற்றிக் கொள்ளாதவைகளாகவும், தவறான அல்லது தீய காரியங்களைப் பற்றிக் கொள்கிறவைகளாகவும் இருக்கும். வேறு வார்த்தைகளில் சொன்னால், அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியுடையவர்களாக அல்லாமல், பரிசுத்தமற்ற ஆவியுடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் மரித்தோரிலிருந்து எழுந்து வரும்போது அல்லது மரணநிலைக்குள் செல்லாமல் ராஜ்ய சூழ்நிலைகளுக்குள் வரவிருக்கும்போது, அவர்களுடைய மனம் இருதயம் மற்றும் சித்தம் வருந்தத்தக்க விதத்தில் மிகவும் சீர்கேடானதாக இருக்கும்.

## மில்லினிய யுகத்தில் பரிசுத்த ஆவி அளிக்கப்படுவதின் நோக்கங்கள்

*12.* இப்பொழுது நாம் "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவி அளிப்பதில் தேவன் கொண்டிருக்கிற நோக்கத்தைப் பற்றிய சில கருத்துக்களைப் பார்ப்போம். சில நோக்கங்கள் அவர்களிலுள்ள சீர்கேட்டை குணமாக்குபவைகளாக இருக்கும், அதாவது அவர்களிலுள்ள தீமையை அகற்றுபவைகளாக இருக்கும். சில நோக்கங்கள் அவர்களிலுள்ள குறைப்பாடுகளை நிறைவாக்குபவைகளாக இருக்கும். சில நோக்கங்கள் அவர்களிலுள்ள நன்மையைப் பூரணமாக்குபவைகளாக இருக்கும். ஏனென்றால் இழந்ததைத் திரும்பப் பெறுதலுக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்கிற உலகத்தாரின் பல்வேறு அங்கத்தினர்கள் எவ்வளவு சீர்கேடடைந்தவர்களாக இருந்தாலும், அவர்களில் எந்த ஒருவனும் ஒரு நன்மையும் இல்லாமல், முற்றிலும் சீர்கேடடைந்தவன் அல்லவென்பதை நாம் நினைவு கூருவோமாக. லூத்தரனிஸம், கால்வினிஸம், ஆங்கிலிக்கனிஸம் முதலியவைகள், சில மனுஷர்கள் முற்றிலும் சீர்கேடடைந்தவர்களாக இருக்கிறார்கள் என்று தவறாகப் போதிக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு மனுஷனிலும், சாபத்தினால் உண்டான அழிவினால் பாதிக்கப்படாத தேவ சாயலின் எஞ்சியுள்ள சிறு பகுதிகள் இருக்கின்றன. தேவ சாயலின் எஞ்சியுள்ள இந்த பகுதிகளைப் பூரணமாக்குவது, தீமைகளை அகற்றுவது, சரீர மன கலை ஒழுக்கம் மற்றும் மத ரீதியான குறைப்பாடுகளை நிறைவாக்குவது - இவைகளே பரிசுத்த ஆவியை அளிப்பதில் தேவனுடைய நோக்கங்களாக இருக்கும்.

*13.* இவ்வாறாக முந்திய பத்திகளில் சொல்லப்பட்ட பல குணக்கேடுகளை அழிப்பதற்காகத் தேவன் "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பார். மேலும் அங்கே சொல்லப்பட்ட பல குறைப்பாடுகளை நிறைவாக்குவதற்காகவும் தேவன் "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பார். இந்த குணகேடுகளுக்கு எதிரிடையான குணநலன்களை அபிவிருத்தி செய்வதற்காகவும் தேவன் "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பார். ஏனென்றால் உண்மையுள்ளவரும், நீதியுள்ளவரும், பரிசுத்தருமான நம்முடைய தேவன் விழுந்துபோன மனுகுலத்திலுள்ள சீர்கேட்டை வெறுக்கிறார். மேலும் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பதின் மூலம் அந்த சீர்கேட்டை அகற்றி, மனுகுலத்திற்குத் தேவனுடைய சாயலைத் திரும்பக் கொடுக்க மிகுந்த ஆர்வமுள்ளவராயிருக்கிறார். ஏனென்றால் சத்தியமும் நீதியும் பரிசுத்தமுமான அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம், மனுகுலமானது சத்தியம், நீதி, பரிசுத்தம் மற்றும் ஆசீர்வாதமான சூழ்நிலைகளின் மத்தியில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள தகுதியடைந்து, அதை அனுபவிக்க வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது.

*14.* இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே, அதாவது மனுகுலத்தின் இந்த ஆசீர்வாதத்திற்காகவே தேவன் அவருடைய திட்டத்தில் தெரிந்து கொள்ளப்படுதலின் அம்சங்களை வைத்திருக்கிறார். மேலும் நான்கு தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார்களையும் ஒருவித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார்களையும் ஆயத்தம் செய்வதில் இது தேவனுடைய ஒரு முக்கியமான நோக்கமாக இருக்கிறது. நான்கு தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார்கள் தேவனுடைய ராஜ்யத்தின் முக்கியமான அதிகாரங்களாகவும், ஒருவித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார்கள் கீழ்ப்பட்ட நிலையிலுள்ள அதிகாரங்களாகவும், "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பதில் தேவன் கொண்டிருந்த நோக்கங்களை நிறைவேற்றுவார்கள். அதே நேரத்தில் பாத்திரவான்களின் இரு வகுப்பார்களிலும், ஒருவித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார்களிலுமுள்ள பரிசுத்த ஆவியை நிறைவாக்குவார்கள்.

## பரிசுத்த ஆவியை அளிப்பதற்குத் தேவனுடைய மில்லினிய யுக ஏற்பாடுகள்

*15.* தெரிந்து கொள்ளப்படாத மனுகுலத்தார் அனைவருக்கும் பரிசுத்த ஆவியை அளிப்பதற்குத் தேவனுடைய மில்லினிய யுக ஏற்பாடுகள் போதுமானவைகளாக இருக்கும். அவர்களின் மிகுந்த விருப்ப துணிவுடன் கீழ்ப்படியாதவர்களுக்கும் கூட, அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவிற்குப் பரிசுத்த ஆவி அளிக்கப்படும். ஆனால் இருதய பூர்வமாகக் கீழ்ப்படிகிறவர்களுக்கு அது முழுமையாக அளிக்கப்படும். ஞானமும், வல்லமையும், நீதியும், அன்புமுள்ள நம்முடைய பரம பிதாவிடமிருந்து இதற்குக் குறைவான எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. மேலும் அதைவிட குறைவான எதையும் அவர் கொடுக்கவும் மாட்டார். "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்குத் தேவன் அளிக்கிற ஈவாக அவர் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பதற்குச் செய்த ஏற்பாடுகளை நாம் கருத்தில் கொள்ளும் போது, அவைகள் போதுமானவைகளாக இருக்கும் என்பதை எளிதாகப் புரிந்து கொள்வோம்.

*16.* முதலாவதாக அவர் சாத்தானுடைய அமைப்பையும் அதின் ஏற்பாடுகள் எல்லாவற்றையும் நீக்குவார்.

இவ்வாறாக அவைகளுக்கு மனுகுலத்தின் மேலுள்ள தாக்கத்தை முற்றிலும் அழிப்பார். சாத்தானுடைய அமைப்பின் தலையாகிய சாத்தானையும், அதின் சரீர மாகிய மனந்திரும்பாத விழுந்துபோன தூதர்களையும் பூமியிலிருந்து வெகு தூரமாகக் கொண்டு போவதை இது அர்த்தப்படுத்தும். அவர்கள் பூமியிலிருந்து எவ்வளவு தூரமாகக் கொண்டு போகப்படுவார்கள் என்றால், பூமி யில் நடக்கும் காரியங்கள் என்னவென்று முற்றிலும் அறியாதவர்களாகவும், "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாரை பாவம் மற்றும் தப்பறை சம்பந்தமாகத் தூண்டிவிட முடியாதவர்களாகவும் இருக்கும் அளவிற் காகும். இந்த பொல்லாத ஜீவிகளைக் கட்டி அடித்தள மற்ற குழியில் தள்ளி அடைப்பது என்பது இதையே உருவகமாக அர்த்தப்படுத்துகிறது *(வெளி 20:1-3)*.

*17.* மேலும் மில்லினிய யுகத்தில் "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பார், ஒருவர் மற்றொருவரைத் தீமை செய்யத் தூண்டவோ, ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கு விளைவிக்கவோ, அனுமதிக்கப்பட மாட்டார்கள். இவ்வாறாகத் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாரை சோதித்த மூன்று காரியங்களில் *(சாத்தான்,மாம்சம், உலகம்)* இரு காரியங்கள் *(சாத்தான் மற்றும் உலகம்)* மில்லினிய யுகத்தில் மனுகுலத்தைப் பாவத்தினாலும் தப்பறையினாலும் சோதிக்காது. இந்த இரு காரியங்கள் இல்லாமலிருப்பது என்பது, "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பதற்கு அனுகூலமான ஒரு ஏற்பாடாக இருக்கும். சாத்தானுடைய அமைப்பு நீக்கப்படும் போது, அரசாங்கத்திலும், மதத் திலும், மேல்தட்டு மக்கள் மற்றும் தொழிலாளர் அமைப் பிலுமுள்ள அதின் பூமிக்குரிய, காணக்கூடிய பிரதிநிதி களும் நீக்கப்படுவார்கள்.

*18.* "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பார் அனைவருக்கும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அளிப்பதற்கும், அதைப் பெற்றுக் கொள்வதற் குரிய நிபந்தனைகளுக்கு அவர்கள் எந்தளவிற்குப் பிரதி கிரியை செய்கிறார்களோ அந்தளவிற்கு அவர்களுக்கு அதை அளிப்பதற்கும், தேவன் செய்திருக்கிற மூன்றாம் ஏற்பாடானது, பூமியின்மேலும் "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாரின் மேலும் ஆளுகை செய்யும் தேவ னுடைய ராஜ்யமாக நான்கு தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார்களை ஸ்தாபிப்பதென்பதாகும். இந்த ராஜ்யத் தில் இரு பகுதிகள் இருக்கும்: *(1)* பரத்துக்குரிய அல்லது காணக்கூடாத பகுதி - ராஜாதி ராஜாவாகிய யெஷுஆவும், ராஜாக்களாகிய சபை வகுப்பாரும், ராஜ்யத்தின் இரு பகுதிகளின் மேலும் பிரதான நிலையிலிருப்பார்கள். அவர்களுக்குக் கீழ்ப்பட்ட உதவியாளர்களாகத் திரள் கூட்டத்தாரும் இருப்பார்கள். இந்த ராஜாக்கள் ராஜ்யத் தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ராஜ்யத்தின் செயல்முறைகள் எல்லாவற்றையும் கையாளுவார்கள். அவர்களுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் திரள் கூட்டத்தார் உதவி செய்வார்கள். *(2)* பூமிக்குரிய அல்லது காணக்கூடிய பகுதி - அதிலும் இரு பாகங்கள் இருக்கும் - மூப்பரான பாத்திரவான்கள் பூமிக்குரிய பகுதியில் பிரதான அதிபதி களாக இருப்பார்கள். வாலிபரான பாத்திரவான்கள் அவர் களுக்குக் கீழ்ப்பட்ட அதிபதிகளாக இருப்பார்கள். ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியின் இந்த இரு பாகங்களும் ராஜ்யத்தின் ஆளுகையின் முதன்மையான ஊற்றாக இருப் பதில்லை. தேவனுடைய தலைமையின்கீழ் யெஷுஆ மற் றும் சபை முதன்மையான ஊற்றாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் காணக்கூடாத நிலையிலிருப்பதால், பூமிக்குரிய பகுதியிலுள்ளவர்கள் அவர்களுடைய பிரதி நிதிகளாகச் செயல்படுவார்கள். இக்காலத்திலும் இவ்வித மான ஒரு அமைப்பை நாம் காண்கிறோம். இதற்கு நேர் எதிரான கொள்கைகளும் விளைவுகளுமுள்ள சாத்தானு டைய அமைப்பானதும்கூட, மனுகுலத்தின் மேல் ஆளுகை செய்வதற்காக, அதின் காணக்கூடிய பூமிக்குரிய பிரதிநிதி களாகக், கொடுங்கோல் அரசாங்கங்களையும், பொய் யான மதங்களையும், கொள்ளையிடுகிற மேல்தட்டு அமைப்புகளையும், சுயநலமான தொழிலாளர் ஸ்தாபனங் களையும் உபயோகிக்கிறது. மில்லினிய யுகத்தில் மூப் பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களுக்கு ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார் உதவி செய்வார்கள்.

*19.* இந்த ராஜாக்கள் தப்பறைக்கும், அநீதிக்கும், பரிசுத்தமின்மைக்கும் எதிரிடையான சூழ்நிலைகளையும், சத்தியத்திற்கும் நீதிக்கும் பரிசுத்தத்திற்கும் ஏதுவான சூழ்நிலைகளையும் ஸ்தாபிப்பார்கள். இக்காலத்தில் சாத் தானுடைய அமைப்பு கொடுங்கோல் அரசாங்கங்கள், பொய்யான மதங்கள், கொள்ளையிடும் மேல்தட்டு அமைப்புகள், சுயநலமான தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றை அதின் பிரதிநிதிகளாகக் கொண்டு ஆளுகை செய்வதற்குப் பதிலாக, மில்லினிய யுகத்தின் ராஜாக்கள் அவர்களை நீக்கி, வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யத்தை கையாளுவார்கள். மேலும் பாத்திரவான் களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகக் கொண்டு பேணி போஷிக்கும் ஒரு அரசாங்கத்தையும், அக்காலத்தில் செயல்படுகிற ஒரே மதமாகிய உண்மையான மதத்தையும், உதாரகுணமுள்ள மக்களின் அமைப்பையும், மற்றவர் களுக்கு உதவ உழைக்கும் ஏற்பாடுகளையும் ஸ்தாபிப் பார்கள். தப்பறை மேலோங்கி இருப்பதற்குப் பதிலாக, எங்கும் சத்தியம் செழிப்பாகப் பெருகும். அநீதி மற்றும் அநீதியுள்ளவர்கள் செழிப்பதற்குப் பதிலாக, நீதி மற்றும் நீதியுள்ளவர்கள் அப்போது செழிப்படைவார்கள். இக் காலத்தில் சாத்தானுடைய சாம்ராஜ்யத்தில் அநீதியுள்ளவர் கள் உயர்த்தப்படுவதைப் போல் அல்லாமல், அக் காலத்தில் அநீதியுள்ளவர்கள் தாழ்த்தப்படுவார்கள். மேலும் அவர்கள் கீழ்ப்படியாத போது, அவர்களைச் சீர்த்திருத்துவதற்கு உடனே சிட்சிக்கப்படுவார்கள். இக்காலத்தில் சாத்தானுடைய சாம்ராஜ்யத்தில் நீதியுள்ள வர்கள் தாழ்த்தப்பட்டு துன்புறுத்தப்படுவதைப் போல் அல்லாமல், அக்காலத்தில் அவர்கள் கீழ்ப்படியும் போதெல்லாம், அவர்களை மேலும் உயர்த்துவதற்கு, அவர்களுக்கு உடனடியாக வெகுமதி அளிக்கப்படும்.

*20.* சரீர, மன,கலை, ஒழுக்க மற்றும் மதரீதியான சீர்கேடானது, காலத்தின் பொது இயல்பாக இருப் பதற்குப் பதிலாகப், பூரணத்துவத்தை நோக்கி செல்லும் சரீர, மன,கலை, ஒழுக்க மற்றும் மதரீதியான உயர்த்துதல் அக்காலத்தின் பொது இயல்பாக இருக்கும். விழுந்து போன தூதர்களும் பொல்லாத மனுஷர்களும் மனு குலத்தை பாவத்திற்கும் தப்பறைக்கும் தூண்டுவதற்குப் பதிலாகக், கிறிஸ்து, சபை மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகள் சத்தியத்திற்கும் நீதிக்கும் பரிசுத்தத்திற்கும் அவர்களை ஊக்குவிப்பார்கள். இக்காலத்தில் தவறு செய்வது எளிதாக இருப்பதைப் போல் அல்லாமல், அக்காலத்தில் தீமை செய்வது கடினமாக இருக்கும். இக்காலத்தில் சீர்த்திருந்துவதும், நன்மை செய்வதும் கடினமாக இருப்பதைப் போல் அல்லாமல், அக்காலத்தில் சீர்த்திருந்துவதும், நன்மை செய்வதும் எளிதாக இருக்கும். இக்காலத்தில் பொது மக்களின் உணர்வுகள் தீமையையும் தப்பறையையும் சீர்கேட்டையும் நோக்கி இருப்பதைப் போல் அல்லாமல், அக்காலத்தில் அவைகள் நன்மைக்கும்

உண்மைக்கும் மேன்மைக்கும் ஆதரவாயிருக்கும். இக் காலத்தில் சீர்கேடான ஸ்தாபனங்களும் நிலைமைகளும் பெருகுவதைப் போல் அல்லாமல், அக்காலத்தில் மேம் படுத்தி சீர்ப்படுத்தும் ஸ்தாபனங்களும் நிலைமைகளும் பெருகும்.

*21.* சாபத்தின் பல்வேறு அம்சங்கள் பெருகு வதற்குப் பதிலாக, அவைகள் குறைந்து, இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் பல்வேறு அம்சங்கள் தொடங்கி அதிகரிக்கும். இக்காலத்தில் கேட்டுக்குக் கொண்டு செல் லும் விசாலமான பாதையில், திரளானவர்கள் பிரயாணம் செய்வதைப் போலவும், ஜீவனுக்குக் கொண்டு செல்லும் நெருக்கமான பாதையில் மிக சிலர் மட்டுமே பிரயாணம் செய்வதைப் போலவும் அல்லாமல், அக்காலத்தில் பரிசுத்த பெரும்பாதை எல்லோருக்கும் திறக்கப்படும். அதின் நிபந்தனைகளை நிறைவேற்ற எல்லோரும் திராணி யுள்ளவர்களாக இருப்பார்கள். ஆகையால் அது பொது வாகத், திரளானவர்கள் பிரயாணம் செய்யும் பெரும் பாதையாக இருக்கும். சரீர, மன,கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியான சீர்கேடு அதிகரிப்பதற்குப் பதிலாக, அது குறைந்து, சரீர, மன,கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியான உயர்த்துதல் தொடங்கி, தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் தீமைக் கேதுவான எல்லா காரியங்களும் முற்றிலும் நீக்கப்படும். நன்மைக்கேதுவான எல்லா காரியங்களும் உறுதியான மற்றும் நிலையான அஸ்திபாரத்தின் மேல் ஸ்தாபிக்கப் பட்டு, பெரிதாகச் செழிக்கும். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள எல்லோருக்கும் ஒரு வாய்ப்பை அளிப் பதற்கும், அவர்கள் செய்யும் பிரதிகிரியையின் அளவிற் குத் தக்கவாறு அதை அளிப்பதற்கும் இந்த சூழ்நிலைகள் மிகவும் உதவியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதற்கான வழிமுறைகள்

*22.* மேலே சொல்லப்பட்ட காரியங்களுக்குக் கூடுதலாக, "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப் பாருக்காகப் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதற்கு மிகவும் உதவியான இரண்டு விசேஷித்த ஏற்பாடுகள் ராஜ்யத் திலிருக்கும். அவைகளாவன: (1) தேவ வார்த்தையாகிய சத்தியத்தின் வெளிப்பாடு, (2) உதவி செய்யும் பரிபாலனங் கள். இந்த இரு காரியங்களின் மில்லினிய யுக அம்சங்களை நாம் இப்போது சுருக்கமாகக் கருத்தில் கொள்வோம். முதலாவதாகத் தேவ வார்த்தையாகிய சத்தியத்தைப் பற்றிய காரியங்களைப் பார்ப்போம்.

*23.* கிறிஸ்து வகுப்பாரிடமிருந்து பாத்திரவான் களின் மூலம் கொடுக்கப்படும் தேவ வார்த்தை முதலில் யூதர்களுக்கு அளிக்கப்படும். "அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்குகிறார்" *(சங் 107:20)* என்று எழுதப்பட்டிருப்பதைப் போல், அந்த வார்த்தை யூதர்களைக் குணமாக்கும். ஆனால் அது யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படாது. அது உலகமெங்கும் பரவி எல்லா தேசங்களிலும் பெருகும். நாம் வாசிப்பதைப் போல், "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து … தேவ னுடைய ஆலயத்துக்குப் (வீட்டிற்கு) போவோம் வாருங் கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்… ஏனெனில் சீயோனிலிருந்து (கிறிஸ்து மற்றும் சபை) வேதமும், எருசலேமிலிருந்து (பாத்திரவான்கள்) கர்த் தரின் வசனமும் வெளிப்படும்" *(ஏசா. 2:3).* இந்த வாழ்க்கையில் தவறான வழியில் சென்ற அனைவரும், முழுமையாகப் பிரகாசிப்பிக்கப்படும்படிக்கு அப்பொ ழுது அவர்களுக்குச் சத்தியம் போதிக்கப்படும். "அக் காலத்திலே செவிடர் (மனரீதியாக) புஸ்தகத்தின் வசனங் களைக் கேட்பார்கள்; குருடரின் (மனரீதியாக) கண்கள் இருளுக்கும் (சத்தியம் மற்றும் தப்பறையின் கலவை) அந்தகாரத்துக்கும் (முற்றிலும் தப்பறையான காரியங்கள்) நீங்கலாகி பார்வையடையும்… வழுவி போகிற மனதை யுடையவர்கள் (தப்பறையிலும் தவறான நடத்தையிலும் வழி விலகி போனவர்கள்) புத்திமான்களாகி, முறுமுறுக் கிறவர்கள் (சாபத்தினால் உண்டான கடுமையான சூழ் நிலைகளின் கீழ் முறுமுறுக்கிறவர்கள்) உபதேசம் கற்றுக் கொள்வார்கள்" *(ஏசா. 29:18,24).* எல்லா மனுஷரும் புரிந்து கொள்ளும்படிக்குச் சத்தியம் தேவனுடைய ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பின் பூரணத்துவத்தைத் தெளி வாக்கும் *(ஏசா. 40:5).* தேவனுடைய பரிசுத்த புயமாகிய கிறிஸ்து வகுப்பாரும் எல்லா ஜாதிகளின் மனக்கண் களுக்கு முன்பாக வெளியரங்கமாக்கப்படுவார்கள். எல் லாரும் தேவனுடைய இரட்சிப்பைத் தெளிவாகக் காண் பார்கள் *(ஏசா. 52:10).*

*24.* ஆம், அக்காலத்தில் சத்தியம் சமுத்திரத்தைப் போல் ஆழமாகவும், உலகமெங்கும் இருக்கும் *(ஏசா. 11:9).* அது ஒரு நீரோடை போல் சிறிய அளவில் தொடங்கி, தொடர்ந்து அதிகரித்து அகலமும் ஆழமுமான ஒரு நதியைப் போல் பெருகும். அந்த நதியோரத்திலுள்ள ஜீவ விருட்சங்களின் இலைகள் சாபத்தின் மருந்தாகச் செயல் பட்டு, அதைக் குணமாக்கும் *(எசே. 47:1-12; வெளி. 22:1-3).* மனுகுலத்தின் பெரும்பான்மையோர் சத்தியத்தினால் பிரகாசிப்பிக்கப்படாமல் மரித்ததினால், இந்த வாழ்க்கை யில் நிறைவேற்றப்படாத வாக்குத்தத்தத்தின் பகுதி அக்காலத்தில் நிறைவேற்றப்படும் *(யோவா. 1:9).* ஏனென் றால் எல்லா மனுஷரும் ஆதாமினால் வந்த பாவத்தினால் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற துல்லியமான அறிவை அடையவும் தேவன் தீர்மானமாக இருக்கிறார் *(1 தீமோ. 2:4-6).* இவ்வாறாகத் தேவ வார்த்தையானது, அதின் பிரகாசிப்பிக்கும், ஊக்குவிக்கும் மற்றும் குணமாக் கும் தாக்கங்களின் மூலம், எல்லாருக்கும் பரிசுத்த ஆவி அளிக்கப்படும் வாய்ப்புக்கான வழிமுறையாக இருக்கும். மேலும் அவர்கள் பிரதிகிரியை செய்யுமளவிற்கேற்ற வாறு தேவ வார்த்தையின் மூலம் அவர்களுக்குப் பரிசுத்த ஆவி உறுதியாக அளிக்கப்படும்.

*25.* தேவனுடைய கிறிஸ்து வகுப்பாரின் மூலம் அளிக்கப்படும் தெய்வீக பரிபாலனங்கள், இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவானவைகளாக இருக்கும். அக்காலத் தில், ஒருவன் பாவத்திலும் தப்பறையிலும் இருப்பதைத் தடை செய்யும் அனுபவங்கள் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப்படுவதைத் தெய்வீக பரிபாலனங்கள் நிச்சயிக் கும். அதாவது ஒவ்வொருவனும் அவனிலுள்ள சரீர, மன, கலை, ஒழுக்க மற்றும் மதரீதியான தப்பறைகளையும் பாவத்தையும் அகற்றுவதற்கேதுவாக அமைக்கப்பட்ட அனுபவங்கள் அவனுக்கு அளிக்கப்படும். சத்தியத்தைக் கற்றுக் கொள்ளவும், அப்பியாசிக்கவும் ஒவ்வொரு வனையும் ஊக்குவிக்கும் அனுபவங்கள் அவனுக்கு அளிக்கப்படும். ஒருவன் தப்பறையைப் பரப்புவதைத் தடுத்து, சத்தியத்தைப் பரப்புவதையும், சத்தியத்தின் மூலம் சீர்திருந்த மற்றவர்களுக்கு உதவவும் அவனை ஊக்குவிக்கும் பரிபாலனங்கள் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப்படும். எந்த ஒருவனும் அக்காலத்தில் தீமை யினால் மற்றவர்களைச் சோதிக்க அனுமதிக்கப்படு வதில்லை. அவர்கள் பொய்யான போதனைகளினாலும்

செயல்களினாலும் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்க முயன்றால் உடனடியாகத் தண்டிக்கப்படுவார்கள் *(ஏசா. 26:9)*. அவர்கள் பாவஞ் செய்யவோ, மற்றவர்களை பாவத்தில் ஈடுப்படுத்தவோ முயன்றால், உடனடியாக தண்டிக்கப்படுவார்கள். ராஜ்யத்தின் ஏற்பாடுகளுக்கு அவர்கள் வெளிப்படையாகக்கூட கீழ்ப்படியாமல், துணிவாகவும் தொடர்ந்தும் அவைகளை மீற முயன்றால், நூறு வருட பரீட்சைக்குப் பிறகு அவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் *(ஏசா. 65:20)*. பாவஞ் செய்யப்படும்போது உடனடியாகவும் நீதியாகவும் தண்டிக்கப்படுவதைப் போல், நன்மை செய்யும் போது உடனடியாகவும் மிகுதியாகவும் வெகுமதி அளிக்கப்படும்.

*26.* ஒவ்வொருவனுக்கும் எல்லா விதத்திலும் தேவையான பரிபாலன உதவிகள் அளிக்கப்படும். விசேஷமாகச் சரீர, மன, கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியாக ஏழைகளாகவும் தரித்திரர்களாகவும் இருப்பவர்கள், அவர்களுடைய பெலவீனங்களை மேற்கொள்வதற்கும், குறைப்பாடுகளை நிறைவாக்கிக் கொள்வதற்கும், நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் தேவையான உதவிகள் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப்படும். ஒவ்வொருவனுடைய தேவைகளுக்கும் திறமைகளுக்கும் ஏற்றவாறு, அவனுக்கு விசேஷித்த கவனம் செலுத்தப்படும். ஒவ்வொருவனும் அவனுடைய தேவைகளுக்கு ஏற்ற உதவிகளையும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து அதிகரித்துக் கொள்வதற்கு ஏற்ற உதவிகளையும் பெற்றுக் கொள்ளும் சூழ்நிலைகளில் வைக்கப்படுவான். அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு அதில் பெருகும் படிக்கு கிறிஸ்து வகுப்பார் ஒவ்வொருவனுக்கும் தனிப்பட்ட முறையிலும், எல்லோருக்கும் பொதுவாகவும் கவனம் செலுத்துவார்கள். ஆம், பாவம் தப்பறை மற்றும் சாபத்திற்கேதுவான எல்லா சூழ்நிலைகளையும் காரியங்களையும் அகற்றி, சத்தியம் நீதி பரிசுத்தம் மற்றும் ஆசீர்வாதத்திற்கேதுவான சூழ்நிலைகளையும் காரியங்களையும் உறுதியாக ஸ்தாபிப்பதற்குத் தேவனுடைய பரிபாலனங்கள் கிரியை செய்யும். இவ்வாறாகப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை எல்லோருக்கும் அளிப்பதற்கும், அவர்கள் செய்யும் பிரதிகிரியைக்கு ஏற்றவாறு அதை அவர்களுக்கு அளிப்பதற்கும் தேவ வார்த்தை மற்றும் பரிபாலனங்கள் நிச்சயமாக உதவும்.

## பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு “இழந்ததைத் திரும்பப் பெறும்” வகுப்பார் செய்யவேண்டிய காரியங்கள்

*27.* மில்லினிய யுகத்தில் “இழந்ததைத் திரும்பப் பெறும்” வகுப்பார் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு கர்த்தர் செய்த ஏற்பாடுகள் என்னவென்று பார்த்த பிறகு, அதைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம். ராஜ்யமானது முதலில் பாத்திரவான்களில் கிரியை செய்ய தொடங்கும். பின்பு அவர்கள் மூலமாக, உபத்திரவ காலத்தின் முடிவு வரை வாழ்ந்திருக்கும் இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாரில் கிரியை செய்யும். அதுவும் பாலஸ்தீனாவிலுள்ள யூதர்களிலிருந்து தொடங்கும். அதற்குப் பிறகு ஏற்ற காலத்தில் அவர்களிடமிருந்து சென்று மற்ற இடங்களிலுள்ள விசுவாசியாத யூதர்களிலும் புறஜாதியார்களிலும் கிரியை செய்யும். அதற்குப் பிறகு கிறிஸ்துவும் சபை வகுப்பாரும் மரண நிலையிலுள்ளவர்களுக்காகக் கிரியை செய்யத் தொடங்குவார்கள். அவர்களை அவ்வப்போது கூட்டம் கூட்டமாக மரித்தோரிலிருந்து எழுப்புவார்கள். மரித்தோர் எழுப்பப்படுவதென்பது கடைசியாக மரித்தவர்களிலிருந்து தொடங்கி பின்னோக்கி செல்லும். அவர்கள் எழுந்து வரும்போது உயிரோடிருப்பவர்கள் அவர்களை வரவேற்று அவர்களுக்கு ஊழியஞ் செய்வார்கள். இவ்வாறாக அது குறிப்பிட்ட இடைவெளிகளில் ஒவ்வொரு தலைமுறையையும் பின்னோக்கி சென்றடையும் இறுதியாக மனுகுலத்தார் அனைவரும் மரணத்திலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்டிருப்பார்கள்.

*28.* அப்போது வாழ்ந்து கொண்டிருக்கிற தலைமுறையோடு தொடங்கி, மரித்தோரிலிருந்து திரும்ப வருகிற அடுத்தடுத்த கூட்டம் ஒவ்வொன்றையும், ராஜ்யமானது, முதலாவதாக, பொதுவாகப் பாவத்தைக் குறித்தும், தப்பறையைக் குறித்தும், சாபத்தைக் குறித்தும் போதிக்கும். மேலும் அதில் ஒவ்வொருவனுக்குரிய விசேஷமான பங்கைக் குறித்துக் குறிப்பாக போதிக்கும். இவ்வாறாக அதற்குப் பிரதிகிரியை செய்கிறவர்களில் பின்வரும் இரண்டு விளைவுகளைத் தூண்டிவிடும் ; *(1)* பாவம் மற்றும் தப்பறை என்பவைகளின் தன்மை சம்பந்தமாகவும் விளைவுகள் சம்பந்தமாகவும் அவைகளின் மேல் வெறுப்பு; சாபத்தின் மேல் வெறுப்பு மற்றும் அவைகளுடைய தீமையான தன்மை மற்றும் விளைவுகளினிமித்தம் அவைகள் எல்லாவற்றையும் விட்டுவிடுவது; *(2)* சத்தியம் மற்றும் நீதி ஆகியவைகளின் தன்மை சம்பந்தமாகவும், விளைவுகள் சம்பந்தமாகவும் அவைகளின் மேல் அன்பு மற்றும் அவைகளை அப்பியாசிப்பது. இவ்வாறாகப் பிரதிகிரியை செய்கிறவர்களில் அது மனஸ்தாபத்திற்கு இடமில்லாத தேவனுக்கேற்ற உண்மையான மனந்திரும்புதலை உண்டாக்கும். *(2 கொரி. 7:10)*

*29.* அடுத்ததாக ராஜ்யமானது, அக்காலத்தில் அவர்களுக்கு அளிக்கப்படும் சத்தியத்தில் அவர்களுக்கு விசுவாசத்தை உருவாக்கும். அது தேவனைக் கண்டு கொள்ள முடியாத போதிலும் அவரிடத்தில் உறுதியாயிருக்கிற காணாத விசுவாசமாக இருக்காது. ஏனென்றால் அக்காலத்தில் எல்லா காரியங்களும் எவ்வளவு தெளிவாக்கப்படுமென்றால், அவைகளைக் குறித்து சந்தேகப்படுவதும் அவைகளை ஏற்றுக் கொள்ளாமலிருப்பதும் அசாத்தியமாக இருக்குமளவிற்காகும். எடுத்துக்காட்டாக, கிறிஸ்துவின் வல்லமையினால் அடுத்தடுத்த தலைமுறைகள் மரித்தோரிலிருந்து திரும்ப வருவதை ஜனங்கள் காணும் போதும், எந்த நண்பர்களின் மரணத்தை அவர்கள் கண்டிருந்தார்களோ அந்த நண்பர்களே மரித்தோரிலிருந்து திரும்ப வருவதைக் காணும் போதும், ஆதாமினால் உண்டானதும், அவருக்குள்ளிருக்கும் அனைவருக்கும் மரபு வழியாகச் சென்றதுமான மரண தண்டனையை மனுகுலத்திலிருந்து நீக்கும் உரிமை கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டானதென்று விசுவாசிக்காமலிருப்பது சாத்தியமாகுமா? அநீதி உடனடியாகவும் நியாயமாகவும் தண்டிக்கப்படுவதையும், நீதிக்கு உடனடியாகவும் மிகுதியாகவும் வெகுமதி அளிக்கப்படுவதையும் அவர்கள் காணும்போது, தேவனுடைய பிரதிநிதியாகிய கிறிஸ்து வகுப்பாரின் ஆட்சியின் கீழுள்ள காரியங்களின் ஒழுங்கமைப்பின் கீழ் மனுஷன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று அவர்கள் இனி சந்தேகப்படுவது சாத்தியமாகுமா? கீழ்ப்படிதலின் விளைவாகவும், அதின் வெகுமதியாகவும் அவர்களுடைய ஒவ்வொரு நல்ல விருப்பமும் நிறைவேற்றப்படும் போது, சாத்தானு

டைய ஆட்சி அழிக்கப்பட்டதென்றும், கிறிஸ்து வகுப்பார் ஆளுகை செய்கிறார்களென்றும், அவர்கள் இனி சந்தேகப்படுவது சாத்தியமாகுமா? அவர்கள் மரித்த நிலையிலிருந்த போது உணர்வற்றவர்களாக இருந்ததால், மரிப்பதற்கும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவதற்குமிடையில் தீயோர் வாதிக்கப்பட்டார்கள் என்றும் நீதிமான்கள் பேரின்பத்தை அனுபவித்தார்கள் என்றும் அவர்கள் இனி நம்புவது சாத்தியமாகுமா? மேலும் அக்காலத்திற்குரிய தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை அவர்கள் எல்லோரும் ஒரே விதமாக அனுபவிக்கும் போது, இனி நிறைவேற வேண்டிய வாக்குத்தத்தங்கள் நிறைவேறாமல் போகக் கூடும் என்று அவர்கள் இனி சந்தேகப்படுவது சாத்தியமாகுமா? நிச்சயமாக அக்காலத்தில் அவிசுவாசம் முற்றிலும் அழிக்கப்படும், எல்லோரும் விசுவாசிப்பார்கள்.

*30.* இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பார் இவ்வாறு மனந்திரும்பி விசுவாசத்தை அப்பியாசித்த பிறகு, அவர்கள் இருதயத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு உதவும் படிக்கு [இருதயத்தில் *(heart)* பரிசுத்த ஆவி என்று சொல்லுவதற்குக் காரணமென்னவெனில் அவர்களுக்குச் சத்தியத்தைப் போதிக்கும்போதே மனதில் *(mind)* பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வார்கள்], பிரதிஷ்டை செய்ய அவர்களுக்குக் கட்டளை யிடப்படும். அவர்கள் பாவத்திற்கும் தப்பறைக்கும் மரித்திருக்கவும், சத்தியத்திற்கென்றும் நீதிக்கென்றும் ஜீவிக்கவும் வாக்குக் கொடுப்பதை இது அர்த்தப்படுத்தும். தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாருக்குப் பிரதிஷ்டை ஒரு சிலாக்கியமாகக் கொடுக்கப்பட்டதைப் போல் அல்லாமல், இவர்கள் தங்களைக் கிறிஸ்துவுக்குப் பிரதிஷ்டை செய்வது ஒரு கடமையாகக் கட்டளையிடப்படும். தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பிரதிஷ்டை மரணத்துக்குக் கொண்டுசெல்லும் கீழ்ப்படிதலை அர்த்தப்படுத்தினதைப் போல் அல்லாமல், இது ஜீவனுக்குக் கொண்டுசெல்லும் கீழ்ப்படிதலை அர்த்தப்படுத்தும். இக்காலத்தின் சூழ்நிலைகள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் நீதியின் நிமித்தம் பாடுப்படுவதைக் கோருவதைப் போலவும் பாடுகளை விளைவிப்பதைப் போலவும் அல்லாமல், அக்காலத்தின் சூழ்நிலைகள் நீதியின் நிமித்தம் சிறிதளவும் கூட பாடுபடுவதைக் கோருவதில்லை, அவைகளை அனுமதிப்பதுமில்லை. நிச்சயமாக மரண பரியந்தம் பாடுப்படுவது தேவையேப்படாது. ஏனென்றால் பரிசுத்த பெரும் பாதையானது (ஏசா. 35:8) பிரதிஷ்டை செய்வதையும், பிரதிஷ்டையை நிறைவேற்றுவதையும் இலகுவாக்கும். இருந்தாலும் விருப்பத் துணிவுடன் மீறுகிறவர்களுக்கு அது கடினமாக இருக்கும். ஏனென்றால் அக்காலத்தில் அவ்வாறு மீறுகிறவர்கள் மட்டுமே பாடனுபவிப்பார்கள். இக்காலத்தின் பிரதிஷ்டைகளில், விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் மாம்சத்திற்கும் பாவத்திற்கும் மரித்திருப்பதைக் கோருகின்றன. ஆனால் அக்காலத்தின் பிரதிஷ்டைகள் பாவத்திற்கு மரித்திருப்பதை மட்டுமே கோரும்.

*31.* இவ்வாறாக, "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பார் பிரதிஷ்டை செய்யும்போது பாவத்திற்கு மரிக்கவும், தொடர்ந்து மரித்த நிலையிலே இருக்கவும், நீதிக்கென்று ஜீவிக்கவும் ஒப்புக் கொள்வார்கள். ஆகையால் அவர்கள் அவர்களுடைய பிரதிஷ்டைக்கு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருப்பதற்கு, எல்லா விதமான பாவத்தையும் வெறுத்து, விட்டுவிட்டு, தவிர்த்து, எல்லா விதமான நீதியையும் நேசித்து, பற்றிக் கொண்டு அப்பியாசிக்க வேண்டியதாயிருக்கும். இது அவர்களுடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூருவதையும், தங்களிடத்தில் தாங்கள் அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவதையும் அர்த்தப்படுத்தும். இதை நீதியாகிய கடமை அன்பினால் மட்டுமல்ல தன்னலமற்ற அன்பாகிய தியாக அன்பினாலும் செய்ய வேண்டும். ஆனால் தேவனுக்காகவும் கிறிஸ்து வகுப்பாருக்காகவும், அவர்களுடைய உதவியாளர்களுக்காகவும், பிறருக்காகவும் ஜீவனைப் பலி செய்யுமளவிற்குத் தியாக அன்பு அவர்களில் அபிவிருத்தி செய்யப்படுவதில்லை. மில்லினிய யுக சூழ்நிலைகள் அவ்வித ஒரு காரியத்தைக் கோராமலிருப்பது மட்டுமல்ல, அந்த சூழ்நிலைகளில் அதைச் செய்வதும் அசாத்தியமாக இருக்கும். ஏனென்றால் பாவம் மேலோங்கிப் பெருகும்போது மட்டுமே அவ்வாறு ஜீவனைப் பலி செய்வது சாத்தியமாகும்.

*32.* ஆகையால் மில்லினிய யுக சூழ்நிலைகளின் கீழ் சத்தியத்திற்கும், நீதிக்கும், பரிசுத்தத்திற்கும் கீழ்ப்படிவது, "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாரின் பிரதிஷ்டையில் கோரப்படும். மேலும் அந்த சூழ்நிலைகளின் மத்தியில் விருப்பத்துடன் கீழ்ப்படிகிற அனைவரும் அந்த கோரிக்கையை நிறைவேற்ற திராணியுள்ளவர்களாக இருப்பார்கள். ஆகையால் விருப்பதுணிவுடனும் விடாப்பிடியாகவும் கீழ்ப்படியாதவர்கள் மட்டுமே தோல்வி அடைவார்கள். மேலும் மனுகுலத்தை மனுஷீக பூரணத்துவத்திற்கு திரும்பக் கொண்டு வர வேண்டுமென்ற தெய்வீக நோக்கத்திற்கு இணக்கமாக, அவர்களுக்குத் தேவையான ஒவ்வொரு உதவியையும் ஊக்குவித்தலையும் கிறிஸ்து வகுப்பார் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் தாராளமாக அளிப்பார்கள்.

*33.* மில்லினிய யுக சூழ்நிலைகளுக்கு "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பார் இணங்கி வரும் போது, அதின் இயற்கையான விளைவாக அவர்களுக்குப் பரிசுத்த ஆவி அளிக்கப்படும். அது தேவன் அவர்களுக்கு அளிக்கும் ஈவாக இருக்கும். மேலும் அவர்கள் எந்தளவிற்கு அந்த சூழ்நிலைகளுக்கு இணங்கி வருகிறார்களோ, அந்தளவான பரிசுத்த ஆவியை ஈவாகப் பெற்றுக்கொள்வார்கள். தேவனுடைய மனம் (சிந்தனை) என்ற கருத்தில் பரிசுத்த ஆவி ஒவ்வொரு மனுஷனுக்கும் இலவசமாகவும், எவ்வித நிபந்தனையும் இல்லாமலும், படிப்படியாக அளிக்கப்படும். தேவனுடைய மனமென்பது அந்த மனதில் அடங்கியுள்ள காரியமாகிய சத்தியத்தை அர்த்தப்படுத்தும். அக்காலத்தில் ஒவ்வொரு மனுஷனுக்கும் சத்தியம் அளிக்கப்படுவதால், அந்த கருத்தில் பரிசுத்த ஆவி எல்லோருக்கும் அளிக்கப்படும். ஏனென்றால் எவ்வித நிபந்தனையுமில்லாமல், கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் மூலம் பின்வரும் இரண்டு காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்: (1) ஆதாமின் தண்டனையிலிருந்து எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள், அதாவது இன்னும் மரண நிலைக்குச் செல்லாதவர்கள் மட்டுமல்ல, ஏற்கனவே மரண நிலையிலிருப்பவர்களும் இரட்சிக்கப்படுவார்கள் இது மரித்த அனைவரும் எழுப்பப்படுவதையும், ஆதாமின் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாக ஜீவனை அடைய திரும்ப வருவதையும் அர்த்தப்படுத்தும்; (2) எல்லோரும் சத்தியத்தை அறிகிற துல்லியமான அறிவை அடைய வேண்டும் (1 தீமோ. 2:4). இவ்வாறாகக் கிறிஸ்துவின் மூலம் தேவனிடமிருந்து சத்தியத்தின் நுணுக்கமான அறிவைப் பெற்றுக் கொள்ளும் போது, அவர்களுடைய மனதிலுள்ள சத்தியம் என்ற கருத்தில்

அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வர்கள். மனதிலுள்ள சத்தியம் என்பது பரிசுத்த ஆவியின் ஒரு பகுதியாக இருப்பதால், அந்த அளவான பரிசுத்த ஆவியை எல்லோரும் பெற்றுக் கொள்வார்கள்.

*34.* பரிசுத்த ஆவியின் மீதியான பகுதியை, அதாவது பரிசுத்த இருதயம் மற்றும் சித்தமென்ற கருத்தில் அதைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் எல்லாருக்கும் அளிக்கப்படும். ஆனால் இயல்பாகவே அது எந்த ஒருவன் மேலும் கட்டாயமாகத் திணிக்கப்படாது. அதைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகளுக்கு அவர்கள் எந்தளவிற்கு இணங்கி வருகிறார்களோ, அந்தளவிற்கு அது அவர்களுக்கு அளிக்கப்படும். பிரதிஷ்டை செய்து, அதை நிறைவேற்றுவதே இந்த கருத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்குரிய நிபந்தனையாகும். கொஞ்சம் காலத்திற்கு எல்லாரும் பிரதிஷ்டை செய்வார்கள் *(ஏசா. 45:22,23; பிலிப். 2:9-11)*. ஆகையால் புது சித்தமாகிய பரிசுத்த ஆவியை எல்லாரும் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் அது புதிய ஆவிக்குரிய சித்தமாக அல்லாமல், புதிய மனுஷீக சித்தமாக இருக்கும். ஆதாமும் ஏவாளும் பாவஞ் செய்வதற்கு முன்பு அவர்களுக்கிருந்த சித்தத்தைப் போலவும், யோர்தானுக்கு முன்பு யெஷுஆவுக்கிருந்த சித்தத்தைப் போலவும் இது இருக்கும். இந்த புது சித்தம் அல்லது புதுப்பிக்கப்பட்ட சித்தமென்பது, கிறிஸ்துவின் சித்தத்தைத் தன்னுடைய சித்தமாகக் கொள்ளும் சித்தமாகும். இந்த புது சித்தத்தின் தாக்கத்தின் கீழ், எல்லோரும் கொஞ்சம் காலத்திற்காவது, அவர்களுடைய அசுத்த பற்றுதல்களை ஓரளவிற்காவது சுத்திகரித்துக் கொள்வார்கள். மேலும் தங்கள் பற்றுதல்களில் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும், நல்ல நோக்கங்களினால், நல்ல காரியங்களுக்கு ஓரளவிற்காவது இணைத்து கொள்வார்கள்.

*35.* ஆனால் எல்லோரும் தொடர்ந்து நன்மையில் முன்னேற்றமடைய மாட்டார்கள். அவர்களுடைய சீர்கேடான பற்றுதல்களைச் சீர்திருத்திக் கொள்வதற்காகச் சத்திய தாக்கத்தின் கீழ் தங்களுடைய புது சித்தத்தைக் தொடர்ந்து அப்பியாசிப்பதில் சிலர் களைப்படைவார்கள். இப்படிப்பட்டவர்களில் இரு வகுப்பார் இருப்பார்கள்: (1) முதலாம் வகுப்பார் வெளிப்படையாகவும் கூட சீர்திருத்துவதை நிறுத்திவிடுவார்கள். அது மட்டுமல்ல வெளிப்படையாகவும் விருப்பதுணிவாகவும் கீழ்ப்படியாமலிருப்பார்கள். அதைக் குறித்து அறிவுருத்தப்படும்போதும் தங்களை மாற்றிக்கொள்ள மறுப்பார்கள். இது பரிசுத்த ஆவியை மேலும் பெற்றுக் கொள்வதை நிறுத்துவது மட்டுமல்ல, புது சித்தமாகவும், அதுவரை அபிவிருத்தி செய்து கொண்ட புது இருதயமாகவும் இருக்கிற பரிசுத்த ஆவியையும் அழித்துப் போடும். அவர்களுக்கு அளிக்கப்படும் புத்திமதிகளையும், சீர்திருத்தங்களையும், சிட்சைகளையும் அவர்கள் விடாப்பிடியாக அசட்டை செய்வதால் சபிக்கப்பட்டவர்களாக, *100* வருடங்களுக்குப் பிறகு அழிக்கப்படுவார்கள் *(ஏசா. 65:20)*. ஏனென்றால் மில்லினிய யுகத்தில் அளிக்கப்படும் தண்டனைகளினால் சிலர் கொஞ்சம் காலத்திற்குச் சீர்திருத்தினாலும், பின்பு அவைகளை அசட்டை செய்து, பாவத்தினால் கடினப்படுவார்கள் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன *(ஏசா. 26:9-11)*.

*36.(2)* இரண்டாம் வகுப்பார், ராஜ்யத்தின் வெளிப்படையான ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படியாததினால் உடனடியாக அளிக்கப்படும் அடிகளுக்குப் பயப்படுவதினாலும், அந்த ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிவதினால் அளிக்கப்படும் ஆசீர்வாதங்களை விரும்புவதினாலும், முதலில், மற்ற அனைவரைப் போலவே தகுந்த விதத்தில் கீழ்ப்படிவார்கள். ஆனால் அதற்குப் பிறகு அவர்களுடைய தவறுகளை மேற்கொள்வதற்குச் செய்கிற உள்ளான போராட்டத்தினாலும், இருதயப்பூர்வமாக நீதியை அப்பியாசிப்பதற்குச் செய்யும் போராட்டத்தினாலும் சிலர் விரைவாகவும், மற்றவர்கள் தாமதமாகவும் களைப்படைவார்கள். இவ்வாறாக அவர்கள் புது சித்தமாகிய பரிசுத்த ஆவியைக் காத்துக் கொள்ளவும், புது இருதயமாகிய (நன்மையைப் பற்றிக் கொள்ளும் புதிய பற்றுதல்கள்) பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதிலும் முன்னேற்றமடைவதை நிறுத்தி விடுவார்கள்.

*37.* இருந்தாலும் இந்த வகுப்பார் உள்ளத்தில் சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தை அப்பியாசிப்பதை அதிகளவிற்கு அசட்டை செய்தாலும், வெளிப்படையாகச் சீர்திருந்தி, ராஜ்யத்தின் வெளிப்படையான ஏற்பாடுகளுக்கு இணங்குவார்கள். தேவனிடத்தில் வைக்கிற ஈடற்ற உச்ச நிலையான அன்பையும், தன்னை நேசிப்பதைப் போல் பிறனை நேசிக்கும் அன்பையும் வெளிப்படுத்தும் செயல்களை அப்பியாசிப்பதை அவர்கள் அசட்டை செய்வார்கள். இவர்கள் ஏசா. *65:20*ம் வசனத்தில் சொல்லப்பட்ட கிழவர்கள் ஆவர். அவர்கள் மில்லினிய யுக முழுவதும் தொடர்ந்து முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற சத்தியத்தைக் கற்றுக் கொண்டாலும், அவர்களுடைய நாட்களை நன்மையினால் நிரப்பாதவர்களாக இருப்பார்கள். நிச்சயமாக, இவ்விதமான ஒரு நடத்தை, புது சித்தம், புது இருதயம், புது பற்றுதல்கள் என்ற கருத்தில் பரிசுத்த ஆவியை அவித்துப்போடும். அதின் விளைவாக அவர்கள் மில்லினிய யுகத்தின் முடிவில் புது இருதயம், புது பற்றுதல்கள், புது சித்தம் ஆகியவைகள் முற்றிலும் இல்லாதவர்களாக இருப்பார்கள். ஆனால் ராஜ்யத்தின் வெளிப்படையான ஏற்பாடுகளுக்கு அவர்கள் வெளிப்படையாகக் கீழ்ப்படிவதினால் சரீர மன கலை ஒழுக்கம் மற்றும் மத ரீதியான மனுஷீக திறமைகளில் பூரணர்களாக இருப்பார்கள். ஆனால் குணாம்சத்தில் பூரணர்களாக இருக்க மாட்டார்கள். ஆகையால் இவர்கள் முழு நிறைவான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள தவறியிருப்பார்கள்.

*38.* இந்த வகுப்பார் மத். *25:41-46* வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்ட "வெள்ளாடுகள்" ஆவர். கிறிஸ்துவின் மிக சிறிய சகோதரர்களாகிய "இழந்ததைத் திரும்பப் பெறும்" வகுப்பாருக்கு நன்மை செய்வதற்கு அவர்களுக்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் இருக்கும். சத்தியத்திற்கான அவர்களுடைய பசியை ஜீவ அப்பத்தினால் போஷிக்கவும், நீதிக்கான அவர்களுடைய தாகத்தை ஜீவ தண்ணீரால் தீர்க்கவும், பாவத்தினால் உண்டான அவர்களுடைய நிர்வாணத்தை கிறிஸ்துவின் நீதியினால் உடுத்தவும், பாவத்தினால் உண்டான அவர்களுடைய வியாதிகளில் அவர்களை விசாரிக்கவும், பாவத்தினால் அவர்களுக்கு உண்டான நோய்களை குணமாக்கும் மருந்தாக ஜீவ விருட்சத்தின் இலைகளை அவர்களுக்கு அளிக்கவும், கல்லறை என்னும் சிறைச்சாலையிலிருந்தவர்கள் மீட்டு கொள்ளப்படுவதற்கான ஜெபங்களுடன் அவர்களை விசாரிக்கவும், அவர்கள் மரண நிலையிலிருந்து திரும்ப வரும்போது அவர்களைப் பராமரிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யவும், அவர்களுக்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். ஆனால் இவ்வாறு நன்மை செய்வதற்கான சந்தர்ப்பங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள மாட்டார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், மில்லினிய யுகம் முழுவதும் அவர்கள் அதின் ஆசீர்வாதங்களைச் சுயநலமாகப் பெற்றுக் கொண்டு, அதற்கு எவ்

விதத்திலும் பிரதிகிரியை செய்ய மாட்டார்கள். கிறிஸ்து அவர்களைத் தீமை செய்ததற்காக அல்லாமல், நன்மை செய்ய தவறினதற்காக அவர்களைக் கடிந்து கொள்கிறார் என்பதைக் கவனிப்போமாக. அதாவது அவர்கள் செய்யக் கூடாததைச் செய்ததினால் அல்ல, செய்ய வேண்டியதைச் செய்யாததினால் பாவஞ் செய்கிறார்கள்.

*39.* இந்த இரண்டு வகுப்பார்கள் *(ஏசா. 65:20)*, அதாவது அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்களை நன்மையினால் நிரப்பாத கிழவனும், பரிசுத்த ஆவியை அதிகமாக அபிவிருத்தி செய்து கொள்ளாத தால், அதுவரை அபிவிருத்தி செய்து கொண்டதையும் விரைவாகவோ தாமதமாகவோ இழப்பார்கள். முதல் வகுப்பார் *100* வருட பரீட்சையில் எவ்வித கனியும் தராமல் இரண்டாம் மரணத்திற்குச் செல்வார்கள். இரண்டாம் வகுப்பார் மில்லினிய யுகத்தின் சொற்ப காலத்தின் முடிவில் தீமையானவர்களாக வெளியரங்கமாக்கப்பட்டு இரண்டாம் மரணத்திற்குச் செல்வார்கள்.

## பெரும்பான்மையோர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வார்கள்

*40.* ஆனால் பரிசுத்த ஆவி சம்பந்தமாக இந்த இரு வகுப்பார் செயல்பட்டதைப் போல் எல்லோரும் செயல்பட மாட்டார்கள். ஆம், பெரும்பான்மையோர் "கிருபையின் ஆவியை" நிந்திக்க மாட்டார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம். வேத வசனங்களிலிருந்து நாம் பின்வரும் காரியங்களைப் புரிந்து கொள்கிறோம்: *(1)* பரிசுத்த மனம் (சிந்தனை) என்ற கருத்தில் எல்லோரும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வார்கள், *(2)* புது சித்தம் மற்றும் இருதயம் என்ற கருத்தில் ஆரம்ப நிலையான பரிசுத்த ஆவியை எல்லோரும் பெற்றுக் கொள்வார்கள், *(3)* புது மனம் இருதயம் மற்றும் சித்தம் என்ற கருத்தில் அநேகர் பரிசுத்த ஆவியைத் தக்க வைத்துக் கொள்வார்கள்.

*41.1)* <u>புது மனதில்</u> இது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: வேதாகமத்திலுள்ள முழு சத்தியத்தையும், வேதாகமத்தின் மூன்றாம் பாகமாக மில்லினிய யுகத்தில் அளிக்கப்படும் புது வெளிப்பாடுகளின் முழு சத்தியத்தையும் (வெளி. *20:12*) பெற்றுக் கொள்ளும் வரை அவர்களுக்குச் சத்தியம் அதிகமதிகமாக அளிக்கப்படும். *2)* மேலும் அவர்கள் எல்லோருக்கும் <u>புதுசித்தம்</u> என்ற கருத்தில் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும். அது பாவம், தப்பறை, சாபத்தின் விளைவுகள் ஆகியவற்றிற்கு எதிராகவும், சத்தியம் நீதி பரிசுத்த மற்றும் ஆசீர்வாதமான நிலை ஆகியவற்றிற்கு ஆதரவாகவும், கிறிஸ்துவின் சித்தத்தையே தன்னுடைய சித்தமாகக் கொள்கிற சித்தமாகும். இந்த சித்தத்தை ஒருமுறை ஏற்றுக் கொண்ட பிறகு, அது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவியாக, கிறிஸ்துவின் நற்சித்தத்தை விரும்பவும் செய்யவும் அவர்களில் கிரியை செய்யும். *3)*மேலும் அவர்கள் மரபு வழியாகப் பெற்றுக் கொண்ட மற்றும் வளர்த்துக் கொண்ட சீர்கேட்டினால் உண்டான தீமையான பற்றுதல்களை அகற்றிக் கொள்வது மற்றும் <u>புதுப்பிக்கப்பட்ட பற்றுதல்களை</u> விசுவாச உண்மைத்துவத்துடன் அப்பயாசிப்பதின் மூலம் ஒவ்வொரு நற்பண்பையும் வளர்த்துக் கொள்வது என்ற கருத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு, அபிவிருத்தி செய்து கொண்டு தக்கவைத்துக் கொள்வார்கள்.

*42.* இவ்வாறாக அவர்களுடைய மனரீதியான திறமைகள் பூரணப்படுத்தப்பட்டு, சத்தியத்தை பூரணமாகப் பற்றிக் கொள்ளும்வரை அவர்கள் அவர்களுடைய புது சித்தத்தை விசுவாச உண்மைத்துவத்துடன் அப்பியாசித்து, புரிந்து கொள்ளுதல், ஞாபகப்படுத்திக் கொள்ளுதல், பகுத்தறிந்து நிதானித்தல் ஆகிய மனரீதியான வல்லமைகள் எல்லாவற்றையும் வளர்த்துக் கொள்வார்கள். அவர்களுடைய புது சித்தம் அவர்களுடைய கலைரீதியான திறமைகளைக் கையாளுவதின் மூலம் அவர்கள் மேன்மையான காரியங்கள், அழகான காரியங்கள், இசை, கவிதை, கட்டடக்கலை, ஓவியம், சிற்பக்கலை, சொற்பொழிவு, நகைச்சுவை, இனிமை ஆகியவற்றிற்கான விருப்பத்தைப் பூரணமாக அபிவிருத்தி செய்து கொள்வார்கள்.

*43.* அவ்வாறே அவர்களுடைய புது சித்தம் அவர்களுடைய மதரீதியான பற்றுதல்களைக் கையாண்டு, அவைகளுக்குரிய இலக்குகளைப் பற்றி கொள்ளும்படி செய்வதின் மூலம் அவர்கள் விசுவாசம், நம்பிக்கை, சுய கட்டுப்பாடு, பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், தியாக அன்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்வார்கள். மேலும் புது சித்தம் இந்த ஏழு உயர்நிலை முதன்மை குணநலன்களைக் கையாண்டு, அவைகள் அவர்களுடைய சுயநல மற்றும் சமூக மென்னுணர்வுகளைச் சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின் ஊழியக்காரர்களாக உபயோகிக்கும்படி செய்யும். அதன் மூலம் அவர்கள் தாழ்நிலை முதன்மை குணநலன்களைப் பூரணமாக அபிவிருத்தி செய்து கொள்வார்கள். அவைகளாவன: சரியான சுய மதிப்பு, அங்கீகார விருப்பம், சமாதானம், எச்சரிக்கையோடிருத்தல், ரகசியம் காத்தல், போரிடும் குணம், வலிய தாக்கும் குணம், பரிபாலன விருப்பம், ஆகாரம் ஆரோக்கியம் மற்றும் ஜீவனுக்கான விருப்பம், எதிர்பாலின விருப்பம், கணவன் மனைவிக்குரிய பற்று, பிள்ளைகளின் அன்பு, சகோதரருக்குரிய பற்று, நட்பு, வீட்டின் மேல் பற்று மற்றும் தேசபற்று.

*44.* மேலும் அவர்களுடைய புது சித்தம் உயர்நிலை முதன்மை குணநலன்களைக் கையாண்டு, தாழ்நிலை முதன்மை பற்றுதல்களும் குணநலன்களும் அவைகளைக் கட்டுப்படுத்தும் படி செய்யும் முயற்சிகளை அடக்கி ஆளும்படி செய்வதின் மூலம், அவர்கள் இரண்டாம் நிலை குணநலன்களைப் பூரணமாக அபிவிருத்தி செய்து கொள்வார்கள். அவைகளாவன: மனத்தாழ்மை, தன்னடக்கம், சுறுசுறுப்பான உழைப்பு, தைரியம், ஒளிவு மறைவின்மை, நீடிய சகிப்பு, பொறுத்துக் கொள்ளும் தன்மை, மன்னிக்கும் தன்மை, தாராள குணம், மட்டான உணவு பழக்கம், நீதி கோரும் அளவிற்குச் சுயதியாகம், கற்புடமை, கட்டுப்படுத்தப்பட்ட கணவன் மனைவிக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் அன்பு, கட்டுப்படுத்தப்பட்ட சகோதரபற்று, கட்டுப்படுத்தப்பட்ட நட்பு, கட்டுப்படுத்தப்பட்ட வீட்டின் மேல் பற்று மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட தேசப்பற்று.

*45.* புது சித்தம் உயர்நிலை முதன்மை குணநலன்களைக் கையாண்டு அவைகள் உயர்நிலை முதன்மை, தாழ்நிலை முதன்மை, இரண்டாம் நிலை, மற்றும் சில மூன்றாம் நிலை குணநலன்களை ஒன்றாக இணைத்து அவைகளின் மேல் ஆளுகை செய்யும் படி செய்வதின் மூலம், மூன்றாம் நிலை குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வார்கள். அவைகளாவன: வைராக்கியம், பணிவு நயம், சந்தோஷம், போற்றி துதிக்கும் பயபக்தி, கீழ்ப்படிதல், போதுமென்ற குணம், இரக்கம், மென்நயம், நடுநிலையோடியிருத்தல், நற்குணம், பாரபட்சமின்மை மற்றும் விசுவாசம் உண்மைத்துவம். இவ்வாறு புது சித்தத்தின் மூலம் அபிவிருத்தி செய்து

கொள்ளப்பட்ட இந்த குணநலன்கள் எல்லாவற்றையும் உயர்நிலை முதன்மை குணநலன்கள் பலப்படுத்தி, சரியாகச் சமச்சீர்ப்படுத்தும். இறுதியாகச் சொற்ப காலத்தின் தீவிரமான பரீட்சைகளின் மத்தியில் அவைகளைப் படிகப்படுத்தும்.

*46.* இந்த அபிவிருத்திகள் எல்லாம், *(1)* வெளிப்படையான செயல்கள் இல்லாமலே ஒவ்வொருவனுடைய மனம், இருதயம் மற்றும் சித்தத்தில் கிரியை செய்யும் செயல்பாடுகளின் மூலமும், *(2)* வெளிப்படையான செயல்களின் மூலம் ஒவ்வொருவனுடைய மனம், இருதயம் மற்றும் சித்தத்தில் கிரியை செய்யும் செயல்பாடுகளின் மூலமும் நிகழும். இந்த வெளிப்படையான செயல்பாடுகள் என்னவாக இருக்கும் என்பது *மத். 25:34-40* வரையுள்ள வசனங்களில் உருவகமான செம்மறியாடுகளுக்குச் சொன்ன காரியத்தின் மூலம் குறிப்பிடப்படுகின்றன. மில்லினிய யுகத்தின் வருடங்கள் செல்லச் செல்ல இந்த செம்மறியாடு வகுப்பார் அவர்களுடைய உண்மைத்துவத்தின் மூலம் கர்த்தருடைய வலது பக்கமாகிய தயவுள்ள நிலைக்குள் அதிகமதிகமாக வருவார்கள். ஆனால் உருவகமான வெள்ளாட்டு வகுப்பாரோ, மில்லினிய யுகத்தின் வருடங்கள் செல்லச் செல்ல, அவர்களுடைய சுயநல போக்கினால் அதிகமதிகமாக அவருடைய இடது பக்கமாகிய தயவின்மை நிலைக்குள் செல்வார்கள்.

*47.* இவ்வாறாக மில்லினிய யுகத்தின் நீதிமான்களாகிய உருவகமான செம்மறியாடுகள், மில்லினிய யுகத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தகுந்த விதத்தில் உபயோகித்துக் கொள்வார்கள். அதாவது அவர்கள் மற்றவர்களின் இடத்திலிருந்தால் மற்றவர்கள் தங்களுக்குச் செய்ய வேண்டுமென்று விரும்பும் நன்மையை அவர்கள் மற்றவர்களுக்குச் செய்வார்கள்: சத்தியத்தின் மேல் பசியுள்ளவர்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொடுத்துப் போஷிப்பார்கள், நீதியின் மேல் தாகமுள்ளவர்களுக்கு ஜீவ தண்ணீரைக் குடிக்கக் கொடுப்பார்கள், பாவத்தினால் நிர்வாணமாக இருப்பவர்களைக் கிறிஸ்துவின் நீதியினால் உடுத்துவார்கள், பாவத்தினால் வியாதிப்பட்டவர்களுக்கு ஜீவ விருட்சத்திலிருந்தும் அதின் இலைகளிலிருந்தும் மருந்தைக் கொடுப்பார்கள், கல்லறை என்னும் சிறைச்சாலையிலுள்ள மரித்தோர் மீட்டுக் கொள்ளப்படுவதற்காக விசுவாசத்தின் ஜெபத்தை ஏறெடுப்பார்கள், அவர்கள் திரும்ப வந்த பிறகு அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள்.

*48.* அவர்கள் இவ்வாறு முழுமையாகப் பிரயாசப்படும் போது, ஒவ்வொரு நல்வார்த்தை மற்றும் கிரியையின் செயல்பாடுகளில் அவர்களிலுள்ள பரிசுத்த ஆவியை முழுமையாக ஈடுபடுத்துவார்கள். அதன் மூலம் அவர்களுடைய பரிசுத்த ஆவி அதிகமதிகமாக வளர்ந்து, பலப்பட்டு, சமச்சீர்ப்பட்டு, இறுதியாகப் பூரணமாகப் படிகப்படும். இவ்வாறாக எல்லோரும் ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பின் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் ஆண்டு கொள்ளும் இந்த பரிசுத்த ஆவி அவர்களைக் கனிவு, நற்குணம் மற்றும் நற்பண்புகள் நிறைந்தவர்களாக ஆக்கும். ஒருவர் மற்றொருவரின் மேல் அன்பு கூரும் படி செய்யும். இவ்வாறாக ஒருவருக்கு மற்றொருவரோடிருக்கும் ஐக்கியத்தில் பெரிதும் மகிழ்வார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் தேவனிலும் மற்றும் கிறிஸ்து வகுப்பாரிலும் களி கூருவார்கள். ராஜ்ய வகுப்பாரின் மூலம் அவர்களுக்கு அளிக்கப்படும் தேவ வார்த்தை மற்றும் பரிபாலனங்களின் மூலம் அவர்கள் வளர்த்துக் கொண்ட பரிசுத்த ஆவியானது, அவர்களுடைய மிகவும் விலையேறப் பெற்ற பொக்கிஷமாக இருக்கும்.

## சில கூடுதலான வேதாகம நிரூபணங்கள்

*49.* நம்முடைய பாடத்தோடு தொடர்புடைய இன்னும் சில வேத வசனங்களை ஆராய்வோம். மாம்சமான யாவருக்காகவும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதைக் குறித்துச் சொல்கிற குறிப்பிடதக்க வசனம் *யோவே.2:28*-ம் வசனமாகும். *"அதற்குப் பின்பு (இந்த அதிகாரத்தின் முந்திய பகுதி காண்பிப்பதைப் போல் சுவிசேஷ யுகத்திற்குப் பின்பு, ஆகையால் மில்லினிய யுகத்தில்) மாம்சமான யாவருக்காகவும் என் ஆவியை (மன இயல்பை) ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் (கிறிஸ்து வகுப்பாரின்) குமாரரும் (இந்த வாழ்க்கையிலேயே விசுவாசிக்கிற இஸ்ரயேலர்கள் மற்றும் விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்ட உண்மைத்துவமுள்ளவர்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக்காரர்கள்) உங்கள் குமாரத்திகளும் (இந்த வாழ்க்கையில் விசுவாசியாத யூதர்கள் மற்றும் புறஜாதியார்களும்) தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் (சத்தியத்தை அறியாதவர்களுக்குத் தேவ வார்த்தையைப் போதிப்பார்கள்); உங்கள் மூப்பர் (மூப்பரான பாத்திரவான்கள்) சொப்பனங்களையும் (மில்லினிய வேதாகமத்தின் மூன்றாம் பகுதியின் ஆழமான மில்லினிய சத்தியங்களைத் தெய்வீக அகத்தூண்டுதலினால் பெற்றுக் கொள்வார்கள்), உங்கள் வாலிபர் (வாலிபரான பாத்திரவான்கள்) தரிசனங்களையும் காண்பார்கள் (மில்லினிய யுக வேதாகமத்தின் மூன்றாம் பகுதியின் எளிமையான மில்லினிய சத்தியங்களைத் தெய்வீக அகத்தூண்டுதலினால் பெற்றுக் கொள்வார்கள்)".* இது *அப். 2:17*-ம் வசனத்திலும் எடுத்துரைக்கப்படுகிறது.

*50.* *ஏசா. 32:9-14* வரையுள்ள வசனங்களில் கர்த்தர் பெயர் சபைகளின் வீழ்ச்சியையும் அழிவையும் வர்ணிக்கிறார். ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலம் வரை அது தொடர்ந்து நடைபெற்று நிறைவடையும் என்பதையும் காண்பிக்கிறார். அதற்குப் பிறகு, *வச. 15*ல் இந்த காரியங்களெல்லாம் நிறைவேற்றப்படும் வரை உலகத்தின் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்படாது என்று காண்பிக்கிறார்: *"உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படும் மட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் (இந்த வாழ்க்கையில் மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டு, உருவகமான வனாந்தரமாக இருந்த கிறிஸ்து வகுப்பார்) செழிப்பான வயல்வெளியாகும் (உலகத்தை ஆசீர்வதிப்பதில் மிகுந்த கனிகளைக் கொடுப்பார்கள்); செழிப்பான வயல்வெளி (இந்த வாழ்க்கையில் செழிப்பாக இருந்த பெயர்சபை) காடாக (கனி தராத ஒன்றாக) எண்ணப்படும்".*

*51.* ஏசா.44:3 மற்றொரு குறிப்பான வசனமாகும்: *"தாகமுள்ளவன்மேல் (இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார்) தண்ணீரையும் (சத்தியம்), வறண்ட நிலத்தின் மேல் (இந்த வாழ்க்கையில் நீதியின் கனிகளைக் கொடுக்காத இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாரின் இருதயங்களின் மேல்) ஆறுகளையும் (இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்கள்) ஊற்றுவேன்; உன் சந்ததியின் மேல் [கிறிஸ்து வகுப்பாரின் குமாரரும் குமாரத்திகளும் (யோவே. 2:28)] என் ஆவியையும் (தேவனுடைய மன இயல்பு), உன் (கிறிஸ்து வகுப்பாரின்) சந்தானத்தின் மேல் (இரண்டாம் ஆதாம் மற்றும் ஏவாளின் சந்தானமாகிய இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார்)*

*என் (மில்லினிய யுக) ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.*

*52.* சங்.51:17-ம் வசனமானது நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயமே கிறிஸ்துவின் மூலம் தேவனுக்குப் பிரியமான பலியாக இருக்குமென்று நமக்குக் காண்பிக்கிறது. இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார் புது சித்தமாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு முன் (உபத்திரவ காலத்தில்) இவ்விதமான ஒரு அனுபவத்தையே பெற்றுக்கொள்வார்கள்.

*53.* மில்லினிய யுகத்தில் தேவன் இஸ்ரயேலர் களின் மேல் பரிசுத்த ஆவி ஊற்றுவதைப் பற்றிய கூடுதலான விவரங்கள் எசே. *11:19*-ம் வசனத்தில் கொடுக் கப்பட்டிருக்கின்றன: *"நான் அவர்களுக்கு ஏக இருதயத்தை தந்து (ஒருமைப்பாட்டின் பரிசுத்த ஆவி), அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து (பரிசுத்த ஆவி அதுவரை அவர்களிடம் இல்லா திருந்ததால், அவர்களுக்கொரு புதிய காரியமாக இருக் கும்), கல்லான இருதயத்தை (பாவத்தினாலும் தப்பறை யினாலும் அவர்களுடைய இருதயங்கள் மிகவும் கடினப் பட்டிருக்கின்றன) அவர்கள் மாம்சத்திலிருந்து (விழுந்து போன மன இயல்பு) எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை (மனுஷீக பூரணத்துவமுடைய இருதயம்) அவர்களுக்கு அருளுவேன்".*

*54.* எசே.18-ம் அதிகாரத்தின் வார்த்தைகள், செயல்கள் மற்றும் வர்ணனைகளின் மூலம், அது மில்லினிய யுகத்தை விவரிக்கிறது என்பது வெளிப்படை யாயிருக்கிறது. ஏனென்றால் அந்த காலத்தில் எந்த ஒரு வனின் பற்களும் அவனுடைய பிதாக்களின் பாவங் களினால் கூசி போவதில்லை. அதாவது எந்த ஒருவனும் மற்றொருவரின் பாவத்திற்காகச் சீர்கேடடைந்து தண்டிக் கப்படுவதில்லை. அவனுடைய சொந்த பாவத்திற்காக மட்டுமே தண்டிக்கப்படுவான். எசே. *18:31*ம் வசனத்தில், இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார் முந்திய காலத் தில் செய்த பாவங்களை விளக்கி, புது இருதயமும், புது மன இயல்புமாகிய பரிசுத்த ஆவியை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்று தேவன் அவர்களை ஊக்கு விக்கிறார்.

*55.* எசே. *36:25-27* வரையுள்ள வசனங்களில் இந்த காரியத்தை பற்றிய பல அருமையான வாக்குத்தத் தங்களைக் கர்த்தர் கொடுக்கிறார்: *"அப்பொழுது (மில்லி னிய யுகத்தில்) நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் (தூய்மையான சத்தியம்) தெளிப்பேன் (உங்களுக்குப் போதிக்கப்படும்படி செய்வேன்); நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் (பாவத்தினால் உண்டான அசுசி கள்), உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் (மனதிலும் இருதயத்திலும் சித்தத்திலுமுள்ள விக்கிரகங் கள்) நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமா வீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் (சுத்தமான பற்றுதல்கள்) கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் (பரிசுத்த மன இயல்பாகிய பரிசுத்த ஆவி - அதற்கு முன்பு அது அவர்களிடம் ஒருபோதும் இராத தால், அது அவர்களுக்குப் புதிதான காரியமாக இருக்கும்) கட்டளையிட்டு (தேவ வார்த்தை மற்றும் பரிபாலனங் களின் மூலம் கிறிஸ்து வகுப்பார் அவர்களுக்காகச் செய்யும் ஊழியத்தினால் இது நிறைவேற்றப்படும்), கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப் பேன் (மேலே எசே. 11:19-ம் வசனத்தில் சொல்லப்பட்ட அதே கருத்துக்கள்). உங்கள் உள்ளத்திலே என் ஆவியை (தேவனுடைய மன இயல்பை) வைத்து உங்களை என் கட்டளைகளில் (ஆலோசனைகள், புத்திமதிகள்) நடக்க வும் என் நியாயங்களைக் (போதனைகளை) கைக் கொள்ளவும், அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்".*

*56.* இறுதியாக எசே. *39:29*-ம் வசனத்தில் நமக்கு மற்றொரு சாட்சியும் கொடுக்கப்படுகிறது. மில்லினிய யுகத்தைக் குறித்துச் சொல்லும்போது தேவன் கூறுகிற தாவது: *"நான் இஸ்ரயேல் வம்சத்தார்மேல் என் ஆவியை (மனம், இருதயம், சித்தம் - மன இயல்பு) ஊற்றின படியால் என் முகத்தை (தயவை) இனி அவர்களுக்கு மறைக்க மாட்டேன்".* மனந்திரும்பின இஸ்ரயேலர்களின்மேல் தேவன் ஊற்ற போகிற பரிசுத்த ஆவியின் ஒரு பாகமாக இருக்கும்படி தேவன் பின்வரும் காரியத்தை வாக்குத் தத்தம் செய்கிறார் *(சகரி.12:10): "நான் தாவீது குடும்பத் தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் (இழந்ததைத் திரும்பக் கொடுத்தல் என்னும் கிருபையின் ஆவி, எபி. 10:29) விண்ணப்பத்தின் ஆவியை யும் (ஜெபம் பண்ணும் மன இயல்பு) ஊற்றுவேன்".*

*57.* இவ்வாறாக வேதாகமம் இழந்ததைத் திரும் பப் பெறும் வகுப்பாருக்குப் பரிசுத்த ஆவியை வாக்குத் தத்தம் செய்கிறது. அந்த வாக்குத்தத்தம் முழுமையாக நிறைவேற்றப்படும்போது, உண்மைத்துவத்துடன் கீழ்ப் படிகிற மனுகுலத்திற்கு அது பின்வரும் காரியங்களை அர்த்தப்படுத்தும்: *(1)* சரீர, மன, கலை, ஒழுக்க மற்றும் மதரீதியான மனுஷீக பூரணத்துவம் நித்தியத்திற்கும் திரும்பக் கொடுக்கப்படுவது, *(2)* அவர்கள் தேவனுடைய சாயலாகிய குணாம்சத்தைத் திரும்பப் பெற்றுக் கொள் வது; *(3)* தேவனுடைய ரூபமாக, பூமியின்மேலும், தாழ் நிலை சிருஷ்டிகளின் மேலும் பூமி சம்பந்தப்பட்ட இயற் கையின் பிரமாணங்களின் மேலும் ஆளுகை திரும்பக் கொடுக்கப்படுவது. அது நீதி, நித்திய ஜீவன் மற்றும் நித்திய பாக்கியம் வாசம் பண்ணும் புதிய பூமியையும் (பூரண சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின் மேல் கட்டப் பட்ட சமுதாயம்), மறுசீரமைக்கப்பட்ட பரதீசையும் அர்த்தப்படுத்தும் *(2பேது.3:13)*. மனுகுலம் இனி ஒரு போதும் பாவத்தினாலும் தப்பறையினாலும் சாபத் தினாலும் தீட்டுபடுவதில்லை. மாறாகப் பரிசுத்த ஆவியின் மூலம் தேவனுக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் என்றென்றைக்கும் துதியை உண்டாக்கும்! *(வெளி. 5:13)*

★★★★★★★★★★★★★★★★★★★★★

# நீதியின் விருட்சங்கள்

***PT #479 Sept-Oct 1965 pp. 76,77***

*"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து யெஷுஆவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக"*
*(கொலோ. 2:6,7)*


*1.* **இ**வ்வசனங்களின் சூழ்நிலை அமைப்பு நமக்குப் பின்வரும் காரியங்களைக் காண்பிக்கிறது: அப்போஸ்தலர் சுவிசேஷத்தின் நம்பிக்கையை வேறு ஏதேனுமொரு வகையான விசுவாசத்திலும், வேறு ஏதேனுமொரு வகையான நம்பிக்கையிலும், வேறு ஏதேனுமொரு வகையான வாழ்க்கையின் போக்கிலும்

ஒருவனை நிலை நாட்டுகிற மற்ற பல வகையான நம்பிக்கைகளுடன் வித்தியாசப்படுத்துகிறார். அவர் இந்த வசனங்களை கர்த்தராகிய யெஷுவா கிறிஸ்துவைத் தேவனுடைய பிரதிநிதியாக ஏற்கனவே ஏற்றுக் கொண்டவர்களிடம் சொல்கிறார். அதாவது ஆதாமின் சந்ததியின் மீட்பராக இருப்பதற்கும், வருங்காலத்தில் மனுகுலத்தைப் பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து விடுவிப்பவராக இருப்பதற்கும் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரரை உலகத்தில் அனுப்பினார் என்பதை ஏற்கனவே விசுவாசிக்கிறவர்களிடம் இந்த வார்த்தைகளைச் சொல்கிறார். கிறிஸ்து யெஷுவாவிற்குள்ளிருக்கிற அனைவரும் இந்த புரிந்து கொள்ளுதலுடன் அவரை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த ஒரு செய்தியை மட்டுமே தேவன் அனுப்பி இருக்கிறார். இதுவே "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசமாகும்" *(யூதா 3)*.

## தெய்வீக செய்திக்கு எதிரிடையாக மனுஷருடைய செய்தி

*2.* பவுல் அப்போஸ்தலர் எவர்களுக்கு இந்த காரியங்களை எழுதினாரோ, அவர்கள் இந்த விசுவாசத்தில் தொடர்ந்து நிலை நிற்க வேண்டுமென்றும், பரத்துக்குரிய இந்த செய்தியுடன் பூமிக்குரிய தத்துவங்களை இணைக்க முயலக் கூடாதென்றும் உறுதியாகக் கூறுகிறார். அவர்கள் கிறிஸ்துவைத் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகவும், சகலத்திலும் போதுமானவராகவும் ஏற்றுக் கொண்டிருந்த படியே, அதாவது "அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கி இருப்பதையும்", "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீர பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருப்பதையும்" அவர்கள் ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் நடக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் கிறிஸ்துவைப் பரத்துக்குரிய போதகராக அங்கீகரித்திருப்பதால், அதே பாதையில், அதாவது ராஜ்யத்தில் ஆளுகை செய்பவர்களாக இருக்கும் நிலைக்கு அவர்களைக் கொண்டு செல்லும் பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டியதாயிருந்தது. தெய்வீக செய்தியுடன் ஏதேனுமொரு மானிட போதனை இணைக்கப்படக் கூடுமென்று அவர்கள் ஒருபோதும் எண்ணக் கூடாது. ஏனென்றால் மற்ற கோட்பாடுகளெல்லாம் பரத்துக்குரிய செய்திகளைக் கேட்பவர்களின் மனதில் குழப்பத்தை உண்டாக்கும்.

*3.* ஆனால் தெய்வீக செய்தியை மட்டுமே பின்பற்றவேண்டுமென்று சொல்லும்பொழுது, அப்போஸ்தலர்களின் போதனைகள் அசட்டை செய்யப்பட வேண்டுமென்பதை இது அர்த்தப்படுத்தாது. ஏனென்றால் எஜமானரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் அவருடைய வாயாகச் செயல்படுவார்கள் என்று அவர் தாமே சபைக்கு விசேஷமாகத் தெரிவித்திருந்தார். ஆனால் யெஷுவா மற்றும் அவருடைய அப்போஸ்தலர்கள் கொடுத்த போதனைகளைத் தவிர வேறெந்த போதனையோ, வேறெந்த சபையோ இருக்குமென்று எண்ணாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அப்போஸ்தலர்களைப் பொருத்தவரை, அவர்கள் பூலோகத்திலே எவைகளைக் கட்டுவார்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் என்றும் பூலோகத்திலே அவர்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பார்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும் என்றும் கர்த்தர் தாமே அறிவித்திருந்தார்.



## ஆவிக்குரிய மரத்தின் வளர்ச்சி

*4.* இந்த விஷயத்தை இவ்வாறு அறிவித்தபிறகு, நாம் கிறிஸ்துவில் எவ்வாறு முன்னேற வேண்டுமென்பதை நமக்குக் காண்பிப்பதற்கு அப்போஸ்தலர் மிகவும் தெளிவான ஒரு உதாரணத்தை உபயோகிக்கிறார். கிறிஸ்துவுக்குள் நடக்கிற ஒரு மனுஷனின் உருவகத்தை விட்டுவிட்டு, பரிசுத்த பவுல் ஒரு மரத்தின் உருவகத்தை உபயோகிக்கிறார். ஒரு மரத்துக்கு பலத்தையும் நிலையுறுதியையும் அளிக்கும் போஷாக்கை பெற்றுக் கொள்வதற்காக அதின் வேர் கீழ்நோக்கியும் அதின் அடிமரம் மேல்நோக்கியும் வளரும். ஒரு மரத்தின் வேர்கள் மண்ணுக்குள் உட்சென்று போஷாக்கை உறிஞ்சி கொள்ளும்போது, அதே நேரத்தில் அதின் அடிமரமும் கிளைகளும் மேல்நோக்கி வளர்ந்து, வளர்ச்சிக்குத் தேவையான காரியங்களை இலைகளின் மூலம் பெற்றுக் கொள்ளும். அது போலவே ஒரு கிறிஸ்தவனின் மனமானது தேவ வார்த்தையிலுள்ள மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்ளும். அதே நேரத்தில் வாழ்க்கையின் அனுபவங்கள் சம்பந்தமாக அவன் இந்த வாக்குத்தத்தங்களை இருதயத்தில் மதித்துணருவதின் மூலம் குணாம்சத்தையும் கட்டுகிறான். விசுவாசத்தின் வேர்கள் தெய்வீக திட்டத்தைப் பற்றிய அறிவுக்குள் ஆழமாக உட்செல்லும். குணாம்சமென்னும் மரமோ மென்மேலும் உயர்வாக வளர்ந்து கொண்டு, தேவனுடைய பரிசுத்த ஆவியின் சிறந்த கனிகளை அபிவிருத்தி செய்து அவைகளைப் பக்குவப்படுத்தும். ஏனென்றால் போதனைகள் மூலமாகவே வளர்ச்சியுண்டாகும்.

*5.* ஒரு கிறிஸ்தவன் இவ்வாறு நம்முடைய மீட்பரின் குணாம்ச சாயலில் வளர்ந்து கொண்டிருக்கும் போதும், அவனுடைய விசுவாசத்தின் வேர்கள் தேவ வார்த்தையின் ஆழமான காரியங்களுக்குள் மென்மேலும் ஆழமாக உட்செல்லும்போதும், அவன் விசுவாசத்திலே உறுதிப்படுத்தப்படுகிறான், ஸ்திரப்படுத்தப்படுகிறான். நிலத்தில் நன்றாக வேரூன்றிய ஒரு மரத்தை வேரோடு பிடுங்குவது மிகவும் கடினமான ஒன்றாகும். அந்த மரத்திற்கு அதிசயமான பலமிருக்கும், நிலத்தின்மேல் அதிசயமான பிடிப்பிருக்கும். அவ்வித மரம் சாவதற்குப் பல வருடங்கள் தேவைப்படும். சரியாக நிலைநாட்டப்பட்ட

விசுவாசமுடைய கிறிஸ்தவனின் காரியமும் அவ்வாறே இருக்கும். அவன் தேவ வார்த்தையின் வாக்குத்தத் தங்களில் எவ்வளவு உறுதியாக நிலைநாட்டப்பட்ட வனாகவும் ஸ்திரப்படுத்தப்பட்டவனாகவும் இருக்க வேண்டுமென்றால், தப்பறையாகிய எவ்வித காற்றும் அவனுடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடக் கூடா திருக்கும் அளவிற்காகும்.

*6.* ஏதேனுமொரு புதிய கருத்துக்காக எப் பொழுதுமே தேடிக் கொண்டிருக்கிறவன், விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்படாதவனாக இருக்கிறான் என்பதை நிரூபிக்கிறான். வேதாகமத்திலிருக்கும் தெய்வீக திட்ட மானது தேவனால் செய்யப்பட்ட ஏற்பாடாக இருக்கிற தென்று ஒரு விசை நிச்சயித்துக் கொண்டபிறகு, அந்த நிலையிலிருந்து அசைக்கப்படுவதற்கு இடங் கொடுக்கக் கூடாது. இவ்வாறு தேவ வசனங்களில் வேர் கொண்டு நிலைநாட்டப்பட்ட கிறிஸ்தவர்களின்மேல் பரிணாமக் கொள்கை, கிறிஸ்தவ அறிவியல் *(Christian Science)* முதலிய இக்காலத்தின் பொய்யான கோட்பாடுகளுக்கு எவ்வித தாக்கமும் இருக்காது. கிறிஸ்து யெஷுஆவுக் குள்ளிருக்கிற சத்தியத்தில் ஒருவனுடைய ஆத்துமா உறுதிப்படுத்தப்பட்டு ஸ்திரப்படுத்தப் படவில்லையென் றால், எவ்வித கிறிஸ்தவ வளர்ச்சியோ ஆவிக்குரிய ஜீவனோ தக்கவைக்கப்பட முடியாது.

## ஆவிக்குரிய சீர்கேட்டின் ஒரு காரணம்

*7.* நாம் ஒரு விசை கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துவுக்குள் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக திட்டத் தைப் புரிந்து கொண்டு, நம்மைத் தேவனுக்கும், அவரு டைய வார்த்தையைத் தியானிப்பதற்கும் ஒப்புக் கொடுத்த பிறகு, நம்முடைய ஆவிக்குரிய ஜீவனைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரே வழி இந்த கோட்பாட்டில் தொடர்ந்து நிலை நிற்பதென்பதாகும். அதாவது இந்த நிலத்திலே நம்மை நிலைநிறுத்தி, தொடர்ந்து அங்கே தரித்திருப்பதென்பதாகும்.மற்ற இடங்களிலிருந்து நாம் கூடுதலான போஷாக்கை பெற்றுக் கொள்ளக் கூடு மென்றும், நம்மிடமுள்ள கருத்துக்களை மற்ற கருத்துக் களோடு சேர்ப்பது அதிக பயனுள்ளதாக இருக்கு மென்றும் எண்ணி நாம் மற்ற நிலங்களை நாடக்கூடாது. மற்ற எந்த தத்துவங்களும் கர்த்தருடைய திட்டத்துடன் சேராது. கர்த்தருடைய திட்டம் நிறைவானது. மற்ற வகையான நம்பிக்கைகளிலிருந்து அதற்கு எந்த உதவியும் அவசியமில்லை. கர்த்தருடைய திட்டத்திற்குள் மனுஷ ருடைய தத்துவங்களையும் கருத்துக்களையும் உட்புகுத்த நாடுவது அதின் மதிப்பை குறைக்க மட்டுமே செய்யும். இவ்விதமான ஒரு போக்கினால் நாம் ஒருபோதும் கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் இருக்க முடியாது. அவ்வாறு செய்தால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை சீர் கேடடையும், இறுதியாக நமக்கு ஆவிக்குரிய மரணத்தை விளைவிக்கும்.

*8.* தேவனுடைய எந்த ஒரு பிள்ளையும் தப்பறைகளாகிய பலவித காற்றினாலே அடிப்பட்டு அலைகிறவனாக இருக்கக் கூடாது. ஏதேனுமொரு புதிய தத்துவம் எதைப் போதிக்கிறதென்று அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்திற்கு அவன் இடங் கொடுக்கக் கூடாது. அவ்வாறு செய்வது ஒரு கிறிஸ்தவனின் ஆவிக் குரிய ஜீவனுக்கு மிகவும் அபாயமான ஒன்றாகும். சத்தியத்தை ஒருபோதும் அறிந்திராத ஒருவன் அவ்வாறு செய்வதற்கு ஏதேனுமொரு காரணம் இருக்கக் கூடும். ஆனால் கிறிஸ்துவுக்குள் இருக்கிற சத்தியமென்ன என்பதை ஒரு விசை முழுமையாக நிரூபித்துக் கொண்ட ஒருவன் ஆகாரத்திற்காகப் புதிய மேய்ச்சலைத் தேடிப் போனால், அவனுடைய குற்றம் மன்னிக்கப்படுவ தில்லை. இப்படிப்பட்டவன், இன்னும் கிறிஸ்துவில் உறுதிப்படுத்தப்படாதவனாக இருக்கிறான் அல்லது ஆவிக்குரிய வீழ்ச்சிக்குள் வீழ்ந்திருக்கிறான். நம்முடைய சிந்தனைக்கும், மனரீதியான மற்றும் ஆவிக்குரிய செயல் பாட்டிற்கும் தேவனுடைய திட்டத்தின் பல்வேறு அம்சங் களில் ஒரு வற்றிப் போகாத நிலம் இருக்கிறது.

*9.* ஆபிரகாமின் வித்தின் மூலம் பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பது தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக் காகத் தேடுகிறவர்கள், இந்த வாக்குத்தத்தத்தை நிறை வேற்ற போகிற ஆபிரகாமின் வித்தின் முதன்மையானவர் கிறிஸ்து ஆவார் என்பதை உணருவார்கள். இந்த நோக் கத்திற்காகவே கிறிஸ்து உலகத்தில் வந்தார். அதற்குப் பிறகு, தலையாகிய கிறிஸ்து யெஷுஆ மட்டுமல்ல, அவருடைய சரீரமாகிய சபையும் அதே விசுவாசத்தில், ஆபிரகாமுக்குச் செய்யப்பட்ட அதே வாக்குத்தத்தத்தில் பங்கு கொள்கிறார்கள் என்பதைக் கற்றுக் கொண் டார்கள். தெரிந்து கொள்ளப்பட்ட மற்ற வகுப்பார்களும், ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் ஆபிரகாமின் கீழ்நிலை வித்தாக இருக்கிறார்கள் *(கலா. 3:7 - 9).* அழைக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும், அந்த வித்தின் ஒரு பாகமாக இருக்க உள்ளே வந்து, அவனு டைய விசுவாசத்தை அப்பியாசித்து, கட்டப்படுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படும். தலையும் சரீரமுமாகிய மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்து, பூமியின் காரியங்களைக் கையாண்டு, "உலகத் தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்த இழந்த எல்லாவற்றின் திரும்பக் கொடுத்தலை" தொடங்கும் காலம் சமீபமாயிருக்கிறது *(அப். 3:19 - 21).*

*10.* ஒரு மரமானது எல்லா நேரங்களிலும் ஒரே காரியத்தை உள்வாங்கிக் கொள்வதில்லை. அதற்கு எல்லா நேரங்களிலும் சூரிய ஒளி ஏராளமாகக் கொடுக் கப்படுவதில்லை. மாறாக அந்த மரம் வளருவதற்கு மழை யும் புயல்களும் கூட தேவையாயிருக்கின்றன. அது போலவே தேவனுடைய பிள்ளையானவன் பரிசுத்த ஆவியின் எல்லா கனிகளையும் சிறப்பாக அபிவிருத்தி செய்து கொள்ள, அவனுக்குப் பல வகையான அனு பவங்களும், சில நேரங்களில் அவனுடைய சூழ்நிலைகள் மாற்றப்படுவதும் தேவையாயிருக்கின்றன. பெரிய தோட்டக்காரரின் "மரங்களில்" ஒவ்வொன்றுக்கும் சரி யாக எந்த அனுபவங்களும் சூழ்நிலைகளும் தேவையா யிருக்கின்றனவென்று அவர் சரியாக அறிவார். ஒவ் வொரு மரத்திற்கும் எவ்வளவு சூரிய ஒளி, எவ்வளவு மழை, எவ்வளவு குளிர், எவ்வளவு வெப்பம், எவ்வளவு கிளை நறுக்கப்படுதல் தேவை என்று அவர் அறிவார். ஆகையால் ஒவ்வொருவருடைய காரியத்திற்கேற்ப சிறந்த விதத்தில் அமைக்கப்பட்டதை மட்டுமே அவர் அவர்களுக்குக் கொடுப்பார். வேரூன்றப்பட்டு கட்டப் படுவதின் செயல் முறைக்கு, எவ்வித இடைஞ்சலும் உண்டாக்காமல், அதை அபிவிருத்தி செய்வதற்காக இந்த சூழ்நிலைகளையும் நிலைமைகளையும் எவ்வாறு மாற்ற வேண்டுமென்று அவர் சரியாக அறிவார். அதை எவ்வாறு செய்ய வேண்டுமென்பதை நாம் அறியோம். அதைச் செய்ய முயன்றால் நாம் நமக்கு ஆவிக்குரிய அழிவை வருவித்துக் கொள்வோம். ஆகையால் நாம் எப்பொ முதுமே நம்மை நம்முடைய திறமையுள்ள தோட்டக்

காரரின் பராமரிப்பின் கீழ் காத்துக் கொண்டு, ஆர்வத்தோடு அவரோடு ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது, நாம் வளர்ந்து, பலமடைந்து, அசைக்கப்படக் கூடாதவர்களாக உறுதியாக ஸ்திரப்படுத்தப் படுவோம்.

## வேரின் ஆழமானது, மரத்தின் வலிமையின் மூலமும் கனிகளின் மூலமும் வெளிப்படுத்தப்படும்

*11.* ஒரு மரத்தின் வேர்கள் எவ்வளவு ஆழமாகவும், எவ்வளவு விஸ்தாரமாகவும் வளர்ந்திருக்கின்றன வென்பது அந்த மரத்தின் வலிமையின் மூலமும் கனிகளின் மூலமும் வெளிப்படுத்தப்படும். ஆழமாகவும் உறுதியாகவும் வேர் கொள்ளாத ஒரு மரம், சிறந்த ருசியான கனிகளைக் கொடுக்கவோ, மனுஷனுக்குக் குளிர்ச்சியான, புத்துணர்ச்சி அளிக்கும் நிழலைக் கொடுக்கவோ கூடாததாயிருக்கும். வேர் ஆழமாக நிலத்திற்குள் செல்வது முற்றிலும் இன்றியமையாத ஒன்றாகும். அது போலவே கிறிஸ்தவனின் விசுவாசமும் கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேர் கொண்ட ஒன்றாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்வதின் மூலம் நாம் அவருக்குள் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக சித்தம் என்னவென்பதை மென்மேலும் கற்றுக் கொண்டு, அவருக்குள் வளருகிறவர்களாயிருப்போம். ஒரு மரம் நிலத்தில் வேர் கொள்வதை நாம் பார்க்க முடியாது. ஆனால் வெளிப்படையான அறிகுறிகளின் மூலம் நாம் அதைக் கணிக்கக் கூடும். செழிப்பான இலைகள் இருக்கும்போது அந்த மரம் நன்றாக வேரூன்றி இருப்பதை அர்த்தப்படுத்தும். ஆனால் அந்த வளர்ச்சி அத்துடன் நின்று விட கூடாது. கனிகளும் கொடுக்கப்பட வேண்டும். அதுபோல தேவனுடைய பிள்ளையானவனின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியானது, கிறிஸ்துவின் சாயலுக்கு மென்மேலும் ஒத்திருப்பதின் மூலம் வெளிப்படுத்தப்படும்.

*12.* சில நேரங்களில் கிறிஸ்தவர்கள் உலக காரியங்களில் மிக குறைந்த அறிவுள்ளவர்களாக இருந்தாலும், ஆழமான ஆவிக்குரிய பற்று உடையவர்களாகவும், கிறிஸ்துவுக்குள் மிக ஆழமாக வேர் கொண்டு நிலை நிற்பவர்களாகவும், தேவனுடைய ஆழமான காரியங்களைப் பற்றிய தெளிவான புரிந்து கொள்ளுதல் உடையவர்களாகவும், வளமான கிறிஸ்தவ அனுபவமுடையவர்களாகவும் இருப்பதை நாம் காண்போம். சில நேரங்களில் நாகரீகமான சமுதாயத்தின் பழக்க வழக்கங்களைப் பற்றிய அவர்களுடைய அறிவு, மற்ற பல சகோதரர்களின் அறிவைவிட குறைவாக இருக்கக் கூடும். இந்த காரியங்களைக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு அதிக சந்தர்ப்பங்கள் கிடைக்காமலிருக்கக் கூடும். இருந்தாலும் கிறிஸ்துவுக்குள் அவர்கள் அடைந்த சிறந்த காரியங்கள், உலகத்தின் சமுதாய தரங்களின்படி வெளிப்படையாகச் சிறந்தவர்களாக இருக்கிறவர்களை வெட்கப்படுத்தக் கூடும். ஆகையால் மற்றவர்களை நாம் நிதானிப்பதற்கும், அவர்களுடைய குணத்தை மதிப்பிடுவதற்கும் நாம் உபயோகிக்கும் தரங்கள், எஜமானரின் முன்மாதிரியின்படி அமைத்துக் கொள்ள நாம் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் மேலோட்டமான காரியங்களை அல்லாமல் உள்ளார்ந்த காரியங்களைக் கவனிக்க வேண்டும். மாம்சத்திற்குரிய வெளிப்படையான இயல்புகளைக் கவனிக்காமல், உண்மையான, அவசியமான குணப்பண்புகளைக் கவனிக்க வேண்டும்,. ஏனென்றால் நம்முடைய குணாம்சத்தின் தரத்தையோ, ராஜ்யத்தில் நமக்கு அளிக்கப்படும் இடத்தையோ தீர்மானிப்பதற்குக் கர்த்தர் இந்த மாம்சத்திற்குரிய வெளிப்படையான இயல்புகளுக்கு எவ்வித முக்கியத்துவத்தையும் கொடுக்க மாட்டார்.

## சிந்தனைக்குரிய சில ஆலோசனைகள்

*13.* நாம் வருங்காலத்தில் உலகத்தை நியாயந்தீர்க்க போகிறவர்களின் ஊழியக்காரர்களாக இருக்க விரும்பினால், நம்முடைய சகோதரர்களை மதிப்பிடுவதில் கர்த்தருடைய கண்ணோட்டமாகிய சரியான கண்ணோட்டத்தை எடுத்துக் கொள்ள கற்றுக் கொள்ளாவிட்டால், ஊழியக்காரர்களாக இருக்கும் நிலைக்கு எவ்வாறு தகுதிப்படுத்தப்படக் கூடும்? சகோதரர்கள் மேல் நாம் வைக்கும் அன்பும், அவர்களைப் பற்றிய நம்முடைய மதிப்பீடும் கர்த்தர் முற்றிலும் கவனிக்காத அற்ப காரியங்களினால் நாம் கணக்கிட்டால், வருங்காலத்தின் நியாயாதிபதிகளின் ஊழியக்காரர்களாக இருக்க நம்மைத் தகுதிப்படுத்தும் குணாம்ச பண்புகளை நாம் அபிவிருத்தி செய்து கொள்கிறோமா? நாம் எல்லாவற்றிலேயும் கிறிஸ்துவுக்குள் எவ்வாறு வளருகிறோம்? நாம் நம்முடைய எஜமானரின் சாயலுக்கு ஒத்தவர்களாக இருக்கும்படிக்கும், இறுதியாக அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் படிக்கும், இந்த காரியங்கள் சம்பந்தமாக நம்மை நாமே கண்டிப்பாக நியாயந்தீர்த்துக் கொள்வோமாக.

*14.* நாம் விசுவாசத்தில் உறுதிப்பட வேண்டுமென்று அப்போஸ்தலர் நமக்கு நிச்சயமாகச் சொல்கிறார். இந்த விசுவாசம் "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசமாகும்" - இதுவே ஒரே விசுவாசமாகும்: என்னதான் நேரிடினும் நாம் இந்த விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். மற்ற காரியங்களுக்கு நம்முடைய கவனத்தைத் திருப்பவும், ஏதேனுமொரு புது காரியத்தை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரவும் சாத்தான் முயலுவான். ஆனால் நம்முடைய கர்த்தராகிய யெஷூஆ கிறிஸ்துவுக்குள் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக திட்டம், தெய்வீக சத்தியம் ஒரே திட்டமாக, ஒரே சத்தியமாக இருக்கிறது. " தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" அது நமக்கு நீதியைப் படிப்பிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது *(2தீமோ 3:17).* நாம் வடிவியற் கணிதம் *(geometry)*, கோணவியல் *(trigonometry)*, புவி அமைவியல் *(geology)*, வானியல் *(astronomy)* அல்லது மற்ற ஏதேனுமொரு அறிவியலை ஆர்வத்துடன் படித்து, அதில் வேரூன்றி கட்டப்படாமல், தேவ வார்த்தையை ஆர்வத்துடன் படித்து, அதில் வேரூன்றிக் கட்டப்பட வேண்டும் *(யோவா. 17:17).* மற்ற காரியங்களைப் பற்றிய இந்த உண்மைகள் எல்லாம் நல்ல காரியங்களாகவே இருக்கின்றன, ஆனால் இக்காலத்தில் அவைகளைப் படிப்பதற்கு நம்மிடம் நேரமில்லை. சிருஷ்டிப்பின் இந்த அற்புதங்கள் எல்லாவற்றையும் கற்றுக் கொள்வதற்கு நித்திய காலமும் நம்மிடம் இருக்கும். ஆனால் இப்போது நாம் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்தவர்களுக்குக் குறிப்பிட்ட நோக்கத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட ஆவிக்குரிய சத்தியத்திலும், தேவ ரகசியத்தின் ஆழமான காரியங்களிலும் தேர்ச்சி பெற விசேஷமாகப் பிரயாசப்பட வேண்டும்.

## ஸ்திரப்படுத்தப்பட்ட ஒரு கிறிஸ்தவன் மதவெறி உடையவன் அல்ல

*15.* சத்தியமென்பது கிறிஸ்து, அவருடைய ஊழியம், அவரோடு நமக்கிருக்கும் பந்தம், சகோதரர்களோடு நமக்கிருக்கும் பந்தம் ஆகியவற்றைப் பற்றிய எல்லா வேதாகம போதனைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நாம் நன்றியறிதலோடு இந்த சத்தியத்தில் நிலைநிற்க வேண்டும். இந்த சத்தியத்தின் வெவ்வேறு அம்சங்களுடன் நம்மை நாமே மென்மேலும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய கர்த்தர் எதைப் போதித்தார், ஏன் அதைப் போதித்தார் என்பது சம்பந்தமாக நாம் தெளிவாக இருக்க வேண்டும். முற்றிலும் இசைவிணக்கமான முழு சத்தியத்தின் பல்வேறு பகுதிகளை, ஒன்றை மற்றொன்றோடு எவ்வாறு இணைக்க வேண்டுமென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாம் முற்றிலும் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

*16.* இந்த மகிமையான காரியங்களை நமக்கு வெளிப்படுத்துவதில் நம்முடைய தேவன் நமக்குக் காண்பித்த அன்பான இரக்கத்தை நாம் இருதய பூர்வமாக மதித்துணர வேண்டும். மேலும் இந்த காரியங்கள், நாமோ அல்லது மற்ற எந்த மனிதனோ உருவாக்கினவைகளாக அல்லாமல், கர்த்தர் தாமே உருவாக்கினவைகளென்று உணர வேண்டும். அவைகள் தேவன் நமக்குக் கொடுத்த ஈவாக இருக்கின்றன. இந்த மேன்மையான ஈவுக்காக நாம் மிகுந்த நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். விலையேறப்பெற்ற இந்த பொக்கிஷத்தை வைராக்கியத்துடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் தேவனுடைய நாமத்திற்கு மகிமையுண்டாக்கும்படி நம்முடைய வெளிச்சத்தைப் பிரகாசிக்க செய்ய வேண்டும்.

*17.* பொய்யான கோட்பாடுகளைப் போதிக்கிறவர்களிலும், பொதுவாக உலகத்தாரிலும் நாம் காண்கிற தவறான ஒரு கருத்து என்னவென்றால், விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது அவசியமானதோ, நன்மையானதோ அல்ல என்பதாகும். ஏனென்றால் விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதென்பது மதவெறியுடையவனாக இருப்பதாகும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். சிறந்த பகுத்தறிவினாலோ அதிகாரப் பூர்வமான தேவ வார்த்தையினாலோ தாங்கள் ஒரு போதும் நிரூபிக்காத ஒரு கருத்தை ஏற்றுக் கொண்டு, அதைப் பிடிவாதமாகப் பற்றிக் கொள்ளுமளவிற்குத் தெளிந்த புத்தியில்லாதவர்களை மதவெறியுள்ளவர்களென்று அழைப்பது சரியானதாகும். ஆனால் தெய்வீக அகத்தூண்டுதலினால் கொடுக்கப்பட்டு, நம்முடைய போதனைக்காக அவருடைய வார்த்தையில் எழுதப்படும்படி தேவன்தாமே செய்த காரியங்களை எளிமையான, பிள்ளைகளுக்கொத்த விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டு, அதை உறுதியாகப் பற்றிக் கொள்கிறவன் மதவெறியுடையவன் அல்ல. மாறாக அவன் உறுதியான, ஸ்திரப்படுத்தப்பட்ட குணாம்சமுடையவனாக இருக்கிறான். மனுஷனுடைய பல்வேறு தத்துவங்களின்மேலும் கற்பனைகளின் மேலும் கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் விழுந்துவிடும்போது, அவ்வித குணாம்சமுடையவர்கள் மட்டுமே நிலைநிற்பார்கள். நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த மகா நாளானது, ஒவ்வொரு மனுஷனுடைய குணாம்ச கட்டமைப்பு எத்தன்மையுள்ளதென்று பரிசோதிக்கிறது. தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்கிறவர்களிலும் கூட மிக சிலர் மட்டுமே இந்த பரீட்சையில் நிலைநிற்பார்கள்.

*18.* இந்த தீவிரமான பரீட்சையில் எவ்வித இழப்பையும் சந்திக்காமல் அதில் பாதுகாப்பாகக் கடந்து செல்ல சிலரால் மட்டுமே கூடும். அவர்களே தேவனுடைய சத்தியத்தில் ஸ்திரப்படுத்தப்பட்டவர்களாகவும் "கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் " இருக்கிறார்கள். திடமான மற்றும் உறுதியான ஒரு கிறிஸ்தவனுக்கும் மதவெறியுடைய ஒருவனுக்கும் இடையிலுள்ள வித்தியாசமென்னவென்றால், ஒருவன் சத்தியத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறான், மற்றொருவன் தப்பறையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறான் என்பதாகும். எல்லாரும் சோதிக்கப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டு, தகுதியுள்ளவர்களா அல்லது தகுதியற்றவர்களா என்று நிரூபிக்கப்படும் வரை, இந்நாளின் "அக்கினி" தொடர்ந்து எரிந்து கொண்டு, இந்த இரு வகுப்பார்களுக்கிடையிலுள்ள வித்தியாசத்தை வெளியரங்கமாக்கும்.

## சுயபரிசோதனையின் முக்கியத்துவம்

*19.* நம்முடைய பாட வசனத்தில் அப்போஸ்தலர் சொல்கிற வார்த்தைகள், தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையையும், அவன் முதலில் பிரதிஷ்டை செய்த காலத்திற்குத் திரும்பக் கொண்டு செல்கின்றன. எந்த நிபந்தனைகளின் கீழ் நாம் கிறிஸ்துவின் சீஷர்களானோம்? நாம் பாவிகள் என்றும், நம்மை நாமே இரட்சிக்க முற்றிலும் திராணியற்றவர்கள் என்றும், அங்கீகரிக்குமளவிற்கு மனத்தாழ்மை நமக்கு அப்போது தேவையாயிருந்ததென்று நாம் நினைவு கூருகிறோம். ஆனால் நாம் இந்த பாதையை எவ்வாறு தொடங்கினோம் என்பதை சிலர் மறந்து விடுகிறார்கள். விசுவாசத்துடனும், மனத்தாழ்மையுடனும்,பணிவு நயத்துடனும், எஜமானரின் சாயலில் உண்மையாகக் கட்டப்பட வேண்டுமென்ற ஆர்வத்துடனும் அவர்கள் தொடங்கி இருந்தார்கள். ஆனால் காலப்போக்கில் அதைப் படிப்படியாக மறந்து விடுகிறார்கள். மேலும் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியை நோக்கி நேரடியாக வளருவதற்குப் பதிலாக, வேறொரு திசையில் வளர தொடங்குகிறார்கள். அவர்கள் உலகத்தாரின் நன்மதிப்பைப் பெற விரும்புகிறார்கள். ஆகையால் கிறிஸ்தவ கோட்பாடுகளைக் குறித்து பேசிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், தங்களுடைய சொந்த கோட்பாடுகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், மேலும் கிறிஸ்தவ அபிவிருத்தியின் அடிப்படை கொள்கைகளையும் அசட்டை செய்கிறார்கள்.

*20.* இவ்வாறாக இவர்கள் படிப்படியாகக் கிறிஸ்துவின் கோட்பாடுகளிலிருந்தும் ஆவியிலிருந்தும் தூரமாகச் செல்கிறார்கள். இந்த அபாயங்களுக்கு எதிராக அப்போஸ்தலர் நம்மை எச்சரிக்கிறார். நீங்கள் கிறிஸ்துவை உண்மையாக ஏற்றுக் கொண்டீர்கள் என்று நிச்சயமாக இருக்கிறீர்களா? உங்களைத் தேவனுக்கு உண்மையாகவும் முழுமையாகவும் பிரதிஷ்டை செய்தீர்களென்று நிச்சயமாக இருக்கிறீர்களா? இதை நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் உண்மையாகப் பிரதிஷ்டை செய்திருந்தால், கிறிஸ்துவின் சாயலில் முன்னேறுவதைக் குறித்துக் கவனமாயிருங்கள். இவ்வாறு கவனமாக உங்களை ஆராய்ந்து கொள்ளவில்லையென்றால், நீங்கள் உண்மையாக முன்னேறாத போது, முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் என்று எண்ணக் கூடும். நம்முடைய நெருக்கமான பாதை நம்முடைய பிரயாணத்தின் முடிவு வரை நெருக்கமாகவே இருக்கும். நம்முடைய விசுவாசத்தை வெளிப்படையாக

அறிக்கை பண்ணுவது, சில அனுசரிப்புகளில் பங்கு கொள்வது ஆகியவைகள் மட்டுமே போதாது. நம்முடைய தோற்றம், நம்முடைய நடத்தை, வாழ்க்கையின் எல்லா செயல்கள் மற்றும் வார்த்தைகளின் மூலம் நாம் கர்த்தரை அறிக்கை செய்ய வேண்டுமென்பதை நினைவு கூரு வோமாக.

*21.* தேவ வார்த்ததையின் வெளிச்சத்தில் நம்மை நாமே தொடர்ந்து ஆராய்ந்து கொள்வதின் மூலம் மட்டுமே நாம் நம்முடைய எஜமானர் நடந்த பாதையில் உண்மையாக முன்னேறக் கூடும். நாம் முன்னேறிக் கொண்டிருக்கையில் சத்தியம் இன்னும் பிரகாசமாகவும், முழுமையாகவும், பொலிவுடனும் ஒளிர வேண்டும். இந்த நோக்கத்திற்காகவே நாம் தேவ வார்த்தையை இறுகப் பற்றிக் கொண்டு, அவருடைய திட்டத்திற்கு இணக்கமாக முன்செல்ல வேண்டும். அபிவிருத்தியடையாத சிறிய தளிர்களைத் தேவன் ராஜ்யத்திற்காக ஏற்றுக் கொள்ள மாட்டார். முழு வளர்ச்சியையும் பக்குவத்தையும் அடைந்த, உறுதியான, பலமான "நீதியின் விருட்சங் களையே" தேவன் விரும்புகிறார் *(ஏசா. 61:3).*

## தேவ வார்த்தை மட்டுமே வளர்ச்சியைக் கொடுக்கும்

*22.* தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்குள்ளே சென்று அவைகளை மென்மேலும் தேடுங்கள். நீங்கள் அதைச் செய்யும்போது, விசுவாசத்தின் வேர்கள் உங்க ளுக்குத் தேவையான போஷாக்கை உள்வாங்கி, அதை உங்கள் ஜீவனுக்குள் அனுப்பும். ஒரு மரம் இவ்வாறு போஷிக்கப்பட்டு வளருவதைப் போலவே நீங்களும் வளருவீர்கள். இவ்வாறு செய்வதின் மூலம் மட்டுமே நீங்கள் உண்மையான விசுவாசத்தில் உறுதிப்படுத்தப் படுவீர்கள். இல்லாவிட்டால் உங்களுடைய கற்பனை களிலோ அல்லது மற்றவர்களுடைய கற்பனைகளிலோ உறுதிப்படுத்தப்படுவீர்கள். நம்முடைய விசுவாசம் அனு தினமும் அதிக பலமுள்ளதாகவும் வலிமையுள்ளதாகவும் வளர வேண்டும். அது நம்மில் நாம் வைக்கும் விசு வாசமாகவோ, கர்த்தரைத் தவிர வேறு எதிலும் நாம் வைக்கும் விசுவாசமாகவோ இருக்கக் கூடாது. நாம் ஆரம்பத்தில் தேவனிடத்திலும் அவருடைய உறுதியான வார்த்தையினிடத்திலும் விசுவாசத்தோடு தொடங்கி னோம். மேலும் நாம் நம்முடைய மேல் நோக்கி செல்லும் பாதையில் தொடர்ந்து முன்னேறும் போது நமக்குத் தேவையான விசுவாசத்தின் அளவும் அதிகரிக்கும். கர்த்தருடைய பிள்ளைகளாக நாம் அறிந்து கொண்ட எல்லா காரியங்களும் கர்த்தராகிய யெஷூஆவின் மூல மும், அவருடைய பரிசுத்த அப்போஸ்தலர்களின் மூல மும், பண்டைய கால தீர்க்கதரிசிகளின் மூலமும் பெற்றுக் கொண்டவைகளாக இருக்கின்றன. நாம் தொடர்ந்து இதே பந்தியில் நன்றியறிதலுடன் பங்குக் கொள்ள வேண்டும்.

*23.* நாம் இதை அடிமைத்தனத்தின் ஆவியாகக் கருதக் கூடாது. "நான் வேதாகமத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களைப் பேச விரும்புகிறேன்; வேதாகம போதனைகளுக்கு மட்டுமே என்னைக் கட்டுப்படுத்த நான் விரும்பவில்லை; எனக்கு அதிக சுயாதீனம் வேண்டும்" என்று நாம் சொல்லக் கூடாது. இந்த மன இயல்பு தேவனுடைய உண்மையான பிள்ளையின் ஆவி யல்ல. இவ்வித கருத்துகளுக்கு நாம் இடங் கொடுத்தால், அது நம்மை ஆவிக்குரிய அழிவிற்குள் கொண்டு செல்லும். நமக்கு இவ்வித தூண்டுதல்கள் வந்தால், நாம் அதை உடனடியாகவும் உறுதியாகவும் எதிர்க்க வேண்டும். நம்முடைய ஆவி இந்த மகிமையான தெய்வீக வெளிப்பாடு நமக்குக் கொடுக்கப்பட்டதற்காக, மிகுந்த நன்றி கடனுடையதாகவும் நன்றியறிதலுள்ளதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு கர்த்தருடைய வழியில் அவரைப் பின்பற்றுவதின் மூலம் மட்டுமே, நாம் உண்மை யான சந்தோஷத்தைக் காண முடியும், உண்மையாக முன்னேறக் கூடும். "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம் முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய யெஷூஆ கிறிஸ்து வினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்க ளுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்". *(2 பேது. 1:10,11)*

★★★★★★★★★★★★★★★★★★★★★

# கர்ஜிக்கிற சிங்கம்

நம்முடைய பெரிய எதிராளியானவன் எந்த கருத்தில் கர்ஜிக்கிற சிங்கம் போல் சுற்றித் திரிகிறான்? *(BSQB p. 19-21)*

*1.* "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கர்ஜிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" *(1பேது 5:8).* "ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்கிறவனான" சாத்தானைக் குறித்து (2கொரி. 11:14) வேதாகமம் நமக்குப் பல்வேறு வர்ணனைகளைக் கொடுக்கிறது. ஒரு சர்ப்பம், ஒரு கர்ஜிக்கிற சிங்கம் முதலியவற்றுக்கு அவன் ஒப் பிடப்படுகிறான். நிச்சயமாக அவன் இந்த வர்ணனைகள் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றுவதில்லை. மேலும் அவன் எல்லா நேரங்களிலும் கர்ஜிக்கிற சிங்கத்தைப் போல் சுற்றித் திரிவதில்லை. சிங்கமானது முற்றிலும் ஓசையில்லாமல் நடக்கும். அதின் பாதங்களின் கீழ் மெத்த மெதுவான பகுதிகள் இருக்கும். அது நெருங்கி வந்திருப்பதை அதின் இரை உணருவதற்கு முன்னமே அதற்கு மிகவும் நெருங்கி வர அந்த பாதங்கள் அதற்கு உதவும். இரையை மிகவும் நெருங்கி வந்த பிறகு, அதின் மேல் பாய்வதற்கு முன்பு, அந்த இரையைப் பயத்தினால் ஸ்தம்பிக்கச் செய்து எளிதில் பிடிக்கும் படிக்குப் பலத்த சத்தத்தோடு கர்ஜிக்கும்.

*2.* பிரதிஷ்டை செய்தவர்களின் எதிராளியான சாத்தான் பலமுள்ளவனாகவும் சிங்கத்திற்கொத்தவனாக வும் கவனமுள்ளவனாகவும் முற்றிலும் விழிப்புள்ள வனாகவும் இருக்கிறான். பவுல் அப்போஸ்தலர் சொல் வதைப் போல் "நம்மை மோசம் போக்க அவன் எப்பொ ழுதுமே நாடுகிறான் *(2கொரி. 2:11).* நம்மை விழுங்க நாடி அவன் பதுங்கிக் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் எப்பொழுதுமே விழிப்புள்ளவனாக இருந்தா லும், ஒரு போதும் கர்ஜனையோடு, நம்மை நெருங்கி வருவதில்லை. மாறாக நம்மை விழுங்கும் படிக்கும், நம்மை மேற்கொள்ளும் படிக்கும், நம்முடைய ஆவிக் குரிய ஜீவனை அழித்து போடும் படிக்கும், விசேஷமாகத் தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அழித்து போடும்படிக்கும், நாம் எதிர்பாராத நேரத்திலும் இடத் திலும் நம்மேல் இரகசியமாக பாய்கிறான். ஒரு சிங்கத் தின் காலடி சத்தத்தை கேட்கும்படி பயிற்றுவிக்கப்பட்ட செவிகள் உடையவர்கள், அதின் காலடிகளை அறிவார் கள். ஆனால் அதனுடைய பழக்க வழக்கங்களை அறியாத வர்கள் அந்த சிறிய சத்தத்தை கேட்கக் கூடாதவர் களாயிருப்பார்கள். அது போலவே, கர்த்தர் நம்முடைய

செவிகளை திறந்திருப்பதினாலும், பிரதிஷ்டை மற்றும் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் என்னும் கலிக் கத்தை நம் கண்களுக்குப் போட்டிருப்பதினாலும், நாம் நம்முடைய பெரிய எதிராளி நெருங்கி வருவதை விரைவாக உணர்ந்து (அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே") அவனை எதிர்க்கிறவர்களாக இருக்க வேண்டும்.

*3.* ஒரு சிங்கமானது அதனுடைய இரைகளை ஸ்தம்பிக்கச் செய்வதற்கு பயத்தை உபயோகிப்பதைப் போலவே சாத்தானும் செயல்படுகிறான். கர்த்தருடைய ஜனங்கள் சரியான பயமாகிய "கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை (போற்றி துதிக்கும் பயபக்தியை)" தவிர மற்ற விதமான பயமுடையவர்களாக இருப்பதென்பது, அவர்களுக்குப் பேரழிவான காரியங்களில் ஒன்றாக இருக்கிறது (1யோவா.4:18) என்று நாம் நம்முடைய தனிப்பட்ட அனுபவங்களிலிருந்தும் அறிந்து கொள்கிறோம். தேவன் அன்பினால் நம்மை ஊக்குவிப்பதைப் போல், சாத்தான் பயத்தினாலும், தப்பறையின் வேராகிய பொய்யான கோட்பாடுகளினாலும் தூண்டுவான். இந்த தப்பறைகள் வருங்காலத்தைக் குறித்து மனுகுலத்திற்குப் பேரச்சத்தைக் கொடுக்கின்றன. எதிராளியிடமிருந்து வருகிற இவ்விதமான தாக்கத்தைத் தான் இங்கே அப்போஸ்தலர் அர்த்தப்படுத்துகிறார். ஆனால் நாம் சாத்தானை எதிர்த்து நிற்க வேண்டும்.

*4.* அப்போஸ்தலர்கள் ஒருமுறை யூத ஆலோசனை சங்கத்தாரினால் அச்சுறுத்தப்பட்டிருந்தார்கள். அப்போது அவர்கள் "இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து,...உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும்" என்று ஜெபம் பண்ணினார்கள் (அப். 4:29,30). ஆலோசனைச் சங்கத்திலுள்ள மனுஷர்கள் பிசாசுகளாக இருந்தார்கள் என்றோ, அவர்களே தங்களில் தாமே கேடான மனச்சார்புடையவர்களாக இருந்தார்கள் என்றோ இது அர்த்தப்படுத்தவில்லை. ஆனால் அப்போஸ்தலர்களைப் பயமுறுத்த அவர்களின் மூலம் எதிராளியானவனே செயல்பட்டான். அதுபோலவே இக்காலத்திலும்

*5.* கர்த்தருடைய ஜனங்கள் தப்பறையாளர்களின் போதனைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அல்லது அவர்களுடைய தப்பறைகளை எதிர்ப்பவர்களுக்குப் பண ரீதியான உதவியளித்தால், கர்த்தருடைய ஜனங்களுக்கு நோய், பலவகையான பண இழப்புகள், வேலைவாய்ப்பின்மை, வியாபாரத்தில் நஷ்டம், தேவ தயவை இழப்பது போன்ற மோசமான விளைவுகள் உண்டாகுமென்று அச்சுறுத்துகிறார்கள். ஆனால் "தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிற" இவர்கள், பல நேரங்களில் மற்றவர்களுக்கு அச்சுறுத்தும் காரியங்களினால் அவர்களோ அல்லது அவர்களுடைய குடும்பத்தாரோ பாடுபடுவதை காண்கிறோம். ஏனென்றால் எழுதப்பட்டிருப்பதை போல், "தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறான். குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான்; தான் வெட்டின குழியில் தானே விழுந்தான்" (சங். 7:14-16).

*6.* கர்த்தருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்கள் சாத்தானையோ அவனுடைய தூதர்களையோ (அவர்கள் அறிந்தோ அல்லது அறியாமலோ அவனுடைய தூதர்களாக இருக்கக் கூடும்) கண்டு பயப்படக்கூடாது. நாம் பயமுள்ள ஆவியை உடையவர்களாக இல்லாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள பரிசுத்த ஆவியுடையவர்களாக இருந்தால் (2தீமோ. 1:7), நாம் தைரியமாகவும் திடமாகவும் இருப்போம். "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோம. 8:31). நாம் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்கும் போது, அது எங்கிருந்து வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், கர்த்தர் நம் பட்சத்திலிருக்கிறார் என்பதை நினைவு கூரவேண்டும். கர்த்தர் நம்மை ஒரு போதும் பயமுறுத்துவதில்லை என்பதையும் நினைவு கூரவேண்டும். நாம் உறுதியான தீர்மானத்தை எடுத்துக் கொள்வதின் மூலம், கண்களால் காண முடியாத மற்ற வல்லமைகளிடமிருந்து பெரிய உதவியைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் (1யோவா. 4:4), சாத்தான் நம்மைத் எதிர்க்கிறான் என்ற எண்ணமும், நாம் விழுந்து போன மாம்சத்தோடு மட்டுமல்ல உயர்வான வல்லமையுடைய நிலைகளிலுள்ள பொல்லாத ஆவிகளோடும் போராட்டம் செய்கிறோம் என்ற எண்ணமும் (எபே. 6:12), நம்மை திகைப்படையச் செய்யும். நாம் சோதனையை எதிர்த்து கர்த்தருக்காகவும் அவருடைய நோக்கத்திற்காகவும் நிற்க தொடங்கின உடனே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படத் தொடங்குவோம். இவ்வாறாக நாம் பிசாசுக்கு எதிர்த்து நிற்போம், அவன் நம்மை விட்டு ஓடி போவான் (யாக். 4:7). கிறிஸ்துவைக் கவனமாகப் பின்பற்றுகிறவன் பிசாசுக்கு இடங் கொடாமல் (எபே. 4:27), பொல்லாங்கன் (சாத்தான்) அவனைத் தொடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்வான் (1யோவா. 5:18). இவ்வாறாகச் சாத்தான் நமக்கு எதிராகக் கர்ஜிக்கலாம், நம்மை விழுங்க நாடலாம். ஆனால் நாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நின்றால், நாம் நம்முடைய திராணிக்கு மேலாகச் சோதிக்கப்படாதபடிக்கு, விசுவாச உண்மைத்துவமுள்ளவரான தேவன் அவருடைய வார்த்தை அவருடைய ஆவி அவருடைய பரிபாலனங்கள் ஆகியவற்றின் மூலம் எப்பொழுதுமே காரியங்களை மாற்றி அமைப்பார். மேலும் நாம் சோதனையைத் தாங்கக் கூடியவர்களாயிருக்கும்படிக்குத் தப்பித்துக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் (1கொரி. 10:13).

★★★★★★★★★★★★★★★★★★★★★

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது


**புது உடன்படிக்கை**

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*

## மில்லினிய வேதாகம சத்திய சகோதரர்களின் ஐக்கிய கூட்டம்
## பெங்களூரு கன்வென்ஷன் - 2025

**ஒன்றான மெய் பிதாவாகிய யாவே தேவனுடைய கிருபையால், நமது மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின் ஐக்கிய கூடுகையானது இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 8, 9 மற்றும் 10 ஆகிய மூன்று நாட்கள் பெங்களூரில் *CLARET NIVAS, Carmelaram* -ல் நடைபெற்றது.**

*08ஆம் தேதி: வரவேற்பு & ஆரம்ப ஜெபம் - Br.GT, மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம் - Br.YR.*

*09ஆம் தேதி: ஆரம்ப ஜெபம் - Br.AB மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம் - Br.SK.*

*10ஆம் தேதி: ஆரம்ப ஜெபம் - Br.XA மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம் - Br.GT*

**சகோ. பீட்டர், சகோ. ராயப்பன் மற்றும் சகோ. பிரவீன்குமார் ஆகியோர் காலைத்தீர்மானம் மற்றும் விசேஷித்த பொருத்தனையை வாசித்தார்கள்.**

| Dis-course No. | Discourse topic | Reference | Duration | Dis-course delivered by |
|---|---|---|---|---|
| | 08.08.25 | | | |
| D1 | மன்னா - 1பேதுரு 1:14,15 | DHM- March 19 | 45 min | Br.TR |
| D2 | கீழ்ப்படிதல் | PT#570, 1980 Nov -Dec | 60 min | Br.SK |
| D3 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம்– 1&2 | E Vol 11 Ch.7 p.472-494 | 90 min | Br.DB |
| D4 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம்– 3 | E Vol 11 Ch.7,8, E Vol 8 Ch.2 & T.S. | 90 min | Br.AT |
| D5 | வாக்குத்தத்தத்தின் தேசத்தில் பிரவேசித்தல் | PT#607, 1987 Jan-Feb | 60 min | Br.AD |
| D6 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம்– 4.1 to 4.3 | T.S. | 60 min | Br.TE |
| D7 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம் - 4.4 to 4.7 | E Vol 11 Ch.7,8 & T.S. | 90 min | Br.GL |
| | 09.08.25 | | | |
| D8 | மன்னா - மத்தேயு 6:23 | DHM- August 09 | 45 min | Br.PM |
| D9 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம் –4.8 | T.S. | 90 min | Br.NJ |
| D10 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம் –4.9 to 4.11 | PT#557,1978, E Vol.11 Ch.7,8 & E Vol.4 p.344 | 90 min | Br.DB |
| D11 | புதுப்பித்துக்கொள்வது மற்றும் பெருக்கிக்கொள்வது. | BS #562, Jan 1983 | 60 min | Br.YR |
| D12 | அன்பை தற்பரிசோதனை செய்யும் ஒரு செயல்முறை | BS #562, Jan1983 | 60min | Br.GT |
| D13 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம்—5.1 to 5.3 | E Vol 11 Ch.8 p.578-589 | 90 min | Br.GL |
| | 10.08.25 | | | |
| D14 | மன்னா - சங்கீதம் 34:18,19 & நீதிமொழிகள் 24:16 | DHM- July 22 | 45 min | Br.AB |
| D15 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- பாகம்—5.4, 6& 7 | PT# 058,1923 & E Vol.11 Ch.8 p.593-602 | 90 min | Br.AT |
| D16 | சுவிசேஷ யுக ஆசரிப்புக் கூடாரம்- கருத்தாராய்வு பாடம் - சுருக்கம் | - | 90 min | Br.DB |

தேவனுடைய மிகுந்த கிருபையினாலே 09.08.25 அன்று சனிக்கிழமை மதியம் 2:30 மணியளவில் பிரதிஷ்டையை நீர் மூழ்க்குதலினால் அடையாளப்படுத்தும் ஞானஸ்நான ஆராதனை நடைப்பெற்றது. அன்றைய தினம் சென்னை - திருவள்ளூரைச் சேர்ந்த **சகோதரி.பேபி தெப்போராள், சகோதரி.எலிசபெத் ஆனந்தன், சகோதரி.ரேஷ்மா ஆனந்தன் சகோ.பிரேம்குமார்** ஆகியோர் தேவனுடைய பெரிதானக் கிருபையினாலும், பெலத்தினாலும் தங்கள் பிரதிஷ்டையை நீர் மூழ்க்கினால் அடையாளப்படுத்தினார்கள். அவர்களுக்கு சகோ.சபேஷ்குமார் உதவி செய்ய சகோ.தமிழரசன் ஞானஸ்நானம் கொடுத்தார். மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தை சேர்ந்த சத்திய சகோதர, சகோதரிகளால் இந்த பிரதிஷ்டை ஆராதனை நடத்தப்பட்டது.

**இந்த ஐக்கிய தியானங்களில் ப்ரான்ஸ் சகோதர, சகோதரிகள் மற்றும் புதுச்சேரி, திருவள்ளூர், பெங்களூரு, லண்டன் மற்றும் ஜெர்மனி ஆகிய இடங்களிலிருந்தும் சகோதர, சகோதரிகள் *Zoom* மூலம் கலந்துகொண்டனர். தேவனுடைய மேலான பரிபாலன வழி நடத்துதலுக்காக ஸ்தோத்திரம்.**